விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 199 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 22 திங்கட்கிழமை (06.07.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சாவதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வடக்கு – கிழக்கில் மாத்திரம் தேர்தல்
## காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கப் போகிறதாம் அரசாங்கம்
### தனித் தவில் வாசிக்கிறார் விமல்



(கொழும்பு)

அடுத்த வருடத்தின் முதல் 06 மாதங்களுக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் மாகாண சபைத் தேர்தலை நடத்தி, நீதிமன்ற சவால்க

15ஆம் பக்கம் பார்க்க

## நீர்கொழும்புச் சிறைக்குள் வெடித்தது மோதல்
- கைதிகள் இருவர் பலி
- 35 ற்கும் அதிகமானோர் படுகாயம்

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் நேற்று (05) மதியம் இரண்டு குழுக் களுக்கிடையே ஏற்பட்ட பயங்கர மோதலில் இரண்டு கைதிகள் உயிரிழந்துள்ளதுடன் 35 ற்கும் அதிகமான கைதிகள் காயமடைந் துள்ளனர்.

02ஆம் பக்கம் பார்க்க

## சொந்தக் காணிகளை மீட்க
## இராணுவ முகாமுக்கு முன்பாக கேப்பாபுலவில் போராட்டம்

(முல்லைத்தீவு)

இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள தமது பூர்வீகக் காணி களை விடுவிக்கக் கோரி கேப்பாபுலவு மக்கள் முன்னெடுத்துவரும் தொடர் போரா ட்டம் நேற்று (05.07.2026) 12வது நாளை எட்டிய நிலையில் இராணுவ பிரதான வாயி லுக்கு முன்பாக நேற்றைய போராட்டம் முன் னெடுக்கப்பட்டது. *(16 ஆம் பக்கம் பார்க்க)*



## விபத்துத் தடுப்பு வாரம் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

பொதுமக்களிடையே விபத்துத் தடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 11 ஆவது தேசிய விபத்துத் தடுப்பு வாரம் இன்று (06) திங்கட்கிழமை முதல் ஆரம்பமா கவுள்ளது.

விபத்துக்கள் காரணமாக 15ஆம் பக்கம் பார்க்க

## நேரத்தை மாற்றிய டெங்கு நுளம்புகள்
### சுகாதாரத் தரப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

டெங்கு நுளம்புகள் கடிக்கும் நேரத்திலும், அவற்றின் செயற்பாட்டிலும் தெளிவான மாற் றம் ஏற்பட்டுள்ளமை அண் 15ஆம் பக்கம் பார்க்க

## நாச்சிக்குடாவைச் சேர்ந்த கும்பல் நாவாந்துறையில் வாள்வெட்டு
### மூவர் யாழ்.போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவாந்து றைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் மூவர் காயம டைந்துள்ளனர்.

கிளிநொச்சி நாச்சிக்கு டாப் பகுதியில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பட்டா ரக வாக னத்தில் வந்த வன்முறைக் குழுவினரே நாவாந்துறையி லுள்ள வீடொன்றில் குறி த்த தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பிச்சென்றுள் ளமை

02ஆம் பக்கம் பார்க்க

## ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்
## கருணா அம்மானின் வாக்குமூலம் பிள்ளையான் - சலேக்கு வினையானது

(கொழும்பு)


ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பாக முன்னாள் அமைச்சர் விநா யகமூர்த்தி முரளிதரனிடம் (கருணா அம்மான்) குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வாக்குமூலம் பெற்றுள்ள தாகச் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியின்படி, குறித்த வாக்குமூலத்தினூ டாகப் பிள்ளையான் தரப்பி னருக்கும் அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பிர தானி சுரேஷ் சலேவுக்கும் இடையிலான தொடர்பு மற் றும்

02ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் கொட்டகை அமைத்தால் தெற்கிலும் கொட்டகை முளைக்குமாம்!

பலாலிப் போராட்டத்தில் கொட்டகை அமைக்கப் பொலிஸார் தடை



15ஆம் பக்கம் பார்க்க


## டெங்குக்கு கடிவாளமிட தொலைபேசி இலக்கம்
### அறிமுகப்படுத்தியது அரசாங்கம்

(கொழும்பு)

நாட்டில் டெங்கு பரவ லைக் கட்டுப்படுத்தும் நோக்கில், பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை அறிவிக்க அவசர தொலைபேசி

15ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவுக்கு என விரைவில் எரிபொருள் நிரப்பு நிலையம்
### அடிக்கல் நாட்டி பணிகள் ஆரம்பம்



02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுயலாப அரசியலே யுத்தத்துக்கு வித்திட்டது

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இடித்துரைப்பு



(கொழும்பு)

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அரசியல்வாதிகள் கையாண்ட குறுகிய, சுயநல அரசியல் குறுக்கு வழிகளினாலேயே வடக்குக் கிழக்கில் தேவையற்ற யுத்தம் உருவானது.

இவ்வாறு கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சுட்டிக்காட்டினார்.

இலங்கை இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் 75ஆவது ஆண்டு நிறைவு விழா கொழும்பு புனித ஜோசப் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இங்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகை யில்,

நமது நாட்டின் அரசியலை உற்று நோக்கினால், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் பணம் சம்பாதிப்பதற்கும் எந்தவொரு தவறான செயலையும் செய்யத் துணியும் நிலையைக் காண முடிகின்றது. நாம் செய்யும் செயல் சரியானதா? தவறானதா? சட்டப்பூர்வமானதா? அல்லது பிறருக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா? என்று எவருமே சிந்திப்பதில்லை. தற்போதைய சமூகத்தில் நிலவும் மிகப்பெரிய பிரச்சினை இந்த அரசியல் குறுக்கு வழிகளாகும்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் மக்கள் ஒரு தேர்தலை நடத்தி புதியதொரு அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்தனர்.

ஆனால், அதற்கு அடுத்த நாளே இந்த அரசாங்கத்தைக் கவிழ்த்து விட்டு நாம் எவ்வாறு அதிகாரத்துக்கு வருவது என்ற குறுகிய அரசியல் வியாபாரமே இங்கு இடம்பெறுகிறது. மக்கள் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றார்கள். எனவே அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்று எவரும் சிந்திப்பதில்லை. எப்போதும் மற்றவர்களின் கால்களை இழுத்து வீழ்த்தவே பார்க்கின்றனர். இதுவே அதிகாரத்தைப் பிடிப்பதற்கான குறுக்கு வழியாகும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் என்ற எவ்வித இன, மதப் பாகுபாடுகளும் இன்றி அனைத்து மக்களும் சகோதரர்களாக ஒன்றிணைந்தே சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டனர். அக்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட தேசியக் கட்சிகள் நாட்டைச் சரியான பாதையில் முன்னோக்கிக் கொண்டு சென்றன.

எனினும், 1956ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அரசியல்வாதிகள் கையாண்ட குறுகிய மற்றும் சுயநல அரசியல் குறுக்கு வழிகளினால் இந்த நாடு முற்றாக வீழ்ச்சியடைந்தது. வடக்கு கிழக்கில் ஏற்பட்ட யுத்தமும் இத்தகையதொரு தேவையற்ற அரசியல் சுயநலத்தால் உருவானதே.

எமது நாட்டின் 75 அரசியல் ஆண்டுகாலப் பேரழிவுக்குப் பின்னால் இருப்பது இந்த அரசியல் குறுக்கு வழிகளேயாகும். அத்தகைய குறுக்குவழிகளைத் தேடி நமது நாட்டுத் தலைவர்கள் எந்தவொரு கீழ்த்தரமான செயலையும் செய்யத் துணிந்தனர். இத்தகைய குறுக்கு வழிகள் மூலம் இலங்கையை ஒருபோதும் அபிவிருத்தி செய்ய முடியாது. நாட்டை முன்னேற்ற வேண்டுமாயின் அர்ப்பணிப்பு அவசியமாகும் என்றார். (ந-7)

## நெடுந்தீவு...

நெடுந்தீவு மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாக விளங்கும் நெடுந்தீவுக்கான எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் பணிகள் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) இடம்பெற்றது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் விமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கான அடிக்கல்லை நாட்டி பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர். (ந-7,33)

## கருணா...

கிழக்கு மாகாணத்தில் அவர்கள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து பல தகவல்கள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

பிள்ளையானின் குழுவினருக்குத் தங்குமிட வசதிகளை வழங்கிய போது, சுரேஷ் சலேயினால் தொடர்புபடுத்தப்பட்ட நபர்களே அந்த வசதிகளை வழங்கியதாகவும் அதற்கான நிதி வசதிகளும் அவர்களாலேயே வழங்கப்பட்டதாகவும் கருணா அம்மான் ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியுள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந-7)

# விபத்தை ஏற்படுத்தியவரும் காயமடைந்துள்ளார்

## மரண விசாரணையில் பொலிஸார் தகவல்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் (04) திருநெல்வேலி சிவன் அம்மன் வீதியில் இடம்பெற்ற தாகக் கூறப்படும் விபத்தானது, நல்லூர் சட்டநாதர் சிவன்கோயிலுக்கு அருகில் இடம்பெற்றதாக பொலிஸ் விசாரணையின்போது தெரிய வந்துள்ளது.

இவ்விபத்தில் ஓய்வுநிலை அரச உத்தியோகத்தர் ஆறுமுகம்ஏகானந்தசிவம்(வயது-73) உயிரிழந்திருந்தார்.

இவரின் மரண விசாரணை நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இதன்போது விபத்தை ஏற்படுத்தியவர் மோட்டார் சைக்கிளில் பயணித்த பருத்தித்துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் என்றும் அவரும் விபத்தில் காயமுற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார்.

விசாரணைகளின் முடிவில் விபத்தில் உயிரிழந்தவரின் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7)

## நாச்சிக்குடா...

பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்கான மூவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட தகராறே குறித்த வாள்வெட்டுத் தாக்குதலுக்கு அடிப்படைக் காரணம் எனத் தெரிவித்த யாழ்ப்பாணப் பொலிஸார் தப்பிச் சென்ற சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். (ந-7,33)

## நீர்கொழும்பு...

காயமடைந்த கைதிகள் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 10 பேருக்கு சத்திரசிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


சிறைச்சாலைக்குள் இருந்த இரு எதிரெதிர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட இந்த மோதல், குறுகிய நேரத்திற்குள் தீவிரமடைந்து பெரும் பதற்றமான சூழ்நிலையை உருவாக்கியது. இதன்போது, வன்முறையில் ஈடுபட்ட கைதிகள் சிறைச்சாலையின் விசேட வார்டுகளின் பூட்டுகளை உடைத்து, அங்கிருந்த கைதிகள் மீது கொடூரமான முறையில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மோதலில் ஈடுபட்ட ஒரு குழுவினர் போதை ஏற்றும் நோக்கில் சிறைச்சாலையிலுள்ள மருந்தகத்தை உடைத்து, அங்கிருந்த வலி நிவாரண மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து நீர்கொழும்பு சிறைச்சாலையின் பெண் கைதிகள் குழுவொன்று அதன் கூரை மீது ஏறி திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர். மோதலில் ஈடுபட்ட தரப்பினருக்கு ஆதரவு தெரிவித்தே அவர்கள் இந்த கூரை மீதேறி போராட்டத்தில் ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 1,800 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நீர்கொழும்பு சிறைச்சாலையின் பாதுகாப்பு தற்போது பலப்படுத்தப்பட்டுள்ளது. மோதலைத் தொடர்ந்து நீர்கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகள், கலகத் தடுப்புப் பிரிவு மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் (STF) சிறைச்சாலைக்குள் வரவழைக்கப்பட்டனர். பாதாள உலகக் குழுவின் முக்கிய உறுப்பினரான "பூரு மூனா" என்பவருடன் நெருங்கிய தொடர்புடைய, "சுரேஷ்" என்ற போதைப்பொருள் கடத்தல்காரரே இந்த வன்முறை மோதலை முன்னின்று வழிநடத்தியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சிறைக்குள் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக காட்டிக் கொடுக்கப்பட்ட சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டே இந்த மோதல் வெடித்துள்ளதாக முதற் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

## கண்ணீர் அஞ்சலி



கலாபூசணம்

**க.வே.சிவகுமாரன்**

ஆரம்பகால உறுப்பினர் யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம்

தோற்றம் : 01.04.1957

மறைவு : 04.07.2026

கழகத்தின் சகல செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்து நட்புரிமையோடு எம்முடன் சேர்ந்து கலைப்பணி ஆற்றிய அமரர் **சிவகுமாரன்** அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயரில் பங்கேற்கும்:-
யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகத்தினர்

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரச சேவையில் அரசியல் செல்வாக்கு அடித்து விரட்டப்பட்டிருக்கிறது

## சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**அரச நியமனங்களில் அரசியல் தலையீடு என்ற கடந்தகால அரசுகளின் அடிப்படை வாதத்தைத் தகர்த்தெறிந்து உண்மையுடனும் வெளிப்படைத் தன்மையுடனும் அரச நியமனங்கள் வழங்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்ட அரச வைத்தியசாலைகளுக்கான சுகாதார உதவியாளர் நியமனம் வழங்கும் நிகழ்விலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு, முடிந்தவரை அதிகமானோரை சேவையில் சேர்க்க தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தற்போதுள்ள வெற்றிட எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு, ஏறத்தாழ ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேர் ஏற்கனவே பொதுச் சேவையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலத்தில், சுகாதாரப் பணியாளர்கள், இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் மற்றும் ரயில்வே திணைக்கள ஊழியர்கள் உள்ளிட்ட சேவைகளுக்கான ஆட்சேர்ப்புகள் பெரும்பாலும் அரசியல் தலையீட்டின் அடிப்படையிலேயே நடைபெற்றன.

சுகாதார அமைச்சில் அரசியல் தலையீடு வெளிப்படையாகத் தெரியும் விடயமாக சுகாதாரப் பணியாளர்களின் ஆட்சேர்ப்பைக் குறிப்பிடலாம்.

தற்போதைய அரசாங்கம் அந்த முறையை முற்றிலுமாக மாற்றி, வெளிப்படைத்தன்மை, நேர்மை மற்றும் தகுதிகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆட்சேர்ப்பு செயன்முறையை நிறுவியுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக, பகிரங்க விளம்பரங்கள் மூலம் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் சம வாய்ப்புகள் வழங்கும் முறை பின்பற்றப்படுகிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் 8 ஆம் திகதி செய்தித்தாள்களில் வெளியான விளம்பரத்தின் மூலமாக பெறப்பட்ட விண்ணப்பங்களில், 88 ஆயிரத்து 736 தகுதியான விண்ணப்பதாரர்களிலிருந்து இந்த 2,737 விண்ணப்பங்களே முதல் தொகுதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆட்சேர்ப்பு, அரசியல் தலையீடு இன்றி, தகுதிகள் மற்றும் முறையான பரீட்சை நடைமுறைகளின் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. அரச சேவையை அரசியல் செல்வாக்குகளிலிருந்து விடுவிப்பதற்காக தற்போதைய அரசாங்கம் பின்பற்றும் கொள்கைக்கு இது ஒரு நடைமுறைச் சான்றாகக் கருதப்படலாம் என அவர் தெரிவித்தார். (க-8)

# உயர்தரப் பரீட்சையின் மீள்திருத்தப் பெறுபேறுகள் வெளியாகின!

(கொழும்பு)

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் (A/L) மறுமதிப்பீட்டுப் பெறுபேறுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சார்த்திகள் தங்களது மறுமதிப்பீட்டுப் பெறுபேறுகளை, பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களான www.doenets.lk அல்லது www.results.exams.gov.lk ஆகியவற்றுக்குச் சென்று பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

# புதிய கல்விச் சீர்திருத்தம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

அடுத்த வருடம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது திட்டமிட்டபடி நிறைவடைந்து வருவதாக கல்வி அமைச்சரும், பிரதமருமான கலாநிதி ஹருணி அமர சூரிய தெரிவித்துள்ளார்.

பாடசாலையிலிருந்து வெளியேறி உலகிற்குச் செல்லும் ஒவ்வொரு பிள்ளைக்கும், அவர்களின் இயல்பான திறன்களுக்குப் பொருத்தமான மற்றும் தொழில் சந்தையில் அதிக தேவையைக் கொண்டுள்ள தொழிநுட்ப மற்றும் தொழிற் பயிற்சிகளை வழங்குவதே இதன் கட்டாய இலக்காகும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (8)

# கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் பெருமளவான வெள்ளி திருட்டு

## இருவர் கைது

(அராலி)


யாழ்ப்பாணம் கீரிமலை - நகுலேஸ்வரர் ஆலயத்தில் 4 கிலோ வெள்ளி திருடிய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த ஆலயத்தில் காணப்பட்ட சுமார் 4 கிலோ வெள்ளி களவாடப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் இரண்டு சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (8-104-33)

# சுகாதார விதிமுறைகளை மீறிய உணவகத்திற்கு எதிராக சட்டநடவடிக்கை



(மன்னார்)

மன்னார் நகர பகுதியில் இயங்கி வரும் பிரபல உணவகம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுகாதாரப் பரிசோதனையின் போது, பாரிய சுகாதார குறைபாடுகள் கண்டறியப்பட்டதை அடுத்து, அந்த உணவகத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபை மற்றும் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து மேற்கொண்ட சோதனையில், உணவகத்தின் சுகாதாரமற்ற நிலைமை கண்டறியப்பட்டது.

இந்நிலையில் உணவகத்தில் வைக்கப்பட்டிருந்த சுகாதாரமற்ற உணவு பொருட்களை பயன்படுத்துவதற்கு அதிகாரிகள் உடனடி தடை விதித்தனர்.

அத்துடன், குறித்த உணவகத்துக்கு எதிராக மேலதிக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் சுகாதார அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். (8-285)

# இந்திய தூதரக சேவைகள் நாளை முதல் ஆரம்பம்




(கொழும்பு)

இலங்கையில் விசா, கடவுச்சீட்டு, மற்றும் ஏனைய தூதரக சேவைகளுக்கான புதிய வெளிப் பணி சேவை வழங்குநராக "அல்ஹிந்த் குளோபல் சர்விசஸ்" நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம், கண்டியிலுள்ள உதவி உயர்ஸ்தானிகராலயம், யாழ்ப்பாணம் மற்றும் ஹம்பாந்தோட்டையிலுள்ள தூதரகப் பொதுப்பணிமனைகள் ஆகியவற்றின் சார்பில், இந்த புதிய சேவை வழங்குநர் நிறுவனம் நாளை முதல் தனது செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கமைய, நாளை விண்ணப்பதாரர்கள் விசா, கடவுச்சீட்டு, ஓ.சி.ஐ மற்றும் ஏனைய தூதரக சேவைகளுக்கான முன்பதிவுகளை 'ICAC SriLanka' இணையத்தளம் ஊடாக மேற்கொள்ள முடியும்.

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், ஹம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள புதிய மையங்களில் இதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விளையாட்டுச் செய்திகள்

## சமநிலையில் நிறைவடைந்த நீலங்களின் சமர் துடுப்பாட்டத் தொடர்




வடக்கின் நீலங்களின் சமர் 15 ஆவது துடுப்பாட்ட போட்டி சம நிலையில் நிறைவடைந்தது.

கிளிநொச்சி இந்துக்கல்லூரி மற்றும் கிளிநொச்சி மத்திய கல்லூரி அணிகள் மோதும் 15 ஆவது வடக்கின் நீலங்களின் சமர் துடுப்பாட்ட போட்டி சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்களும் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலாவது இனிங்சில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி 154 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்கு முதலாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி 206 ஓட்டங்களைப்பெற்றது.

இரண்டாவது இனிங்சில் கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி 214 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்கு 163ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி 26பந்துப்பரிமாற்றங்களில் நான்கு இலக்குகளை இழந்து 101 ஓட்டங்களைப்பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவுக்கு வர போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் ஐந்து போட்டிகளில் இந்துக் கல்லூரி அணியும், நான்கு போட்டிகளில் மத்திய கல்லூரி அணியும் வெற்றி பெற்றுள்ள நிலையில் ஆறு போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்துள்ளன.

போட்டியின் ஆட்ட நாயகனாகவும், சிறந்த பந்துவீச்சாளராகவும் சகலதுறை வீரராகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணி வீரர் எஸ்.அனுரதன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த களத்தடுப்பாளராக கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி வீரர் என்.சாருஜன் தெரிவு செய்யப்பட்டார். (3-316)

## பெண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டம்

## தெல்லிப்பளை பிரதேச செயலக வீராங்கனைக்கு தங்கம்

யாழ் மாவட்ட இளைஞர் சம்மேளனத்திற்கு உட்பட்ட பிரதேச செயலக இளைஞர் அணிகளுக்கு இடையிலான மாவட்ட மட்ட பெண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டத்தில் தெல்லிப்பளை பிரதேச செயலக இளைஞர் அணியை பிரதிநிதித்துவம் செய்த ஏ. அபிஷா தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

யாழ் மாவட்ட இளைஞர் சம்மேளனத்திற்கு உட்பட்ட பிரதேச செயலக இளைஞர் அணிகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுனர் போட்டிகள் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் பெண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டத்தில் தெல்லிப்பளை பிரதேச செயலக இளைஞர் அணியை பிரதிநிதித்துவம் செய்த ஏ. அபிஷா தங்கப் பதக்கத்தையும் சாவகச்சேரி பிரதேச செயலக இளைஞர் அணியை பிரதிநிதித்துவம் செய்த எம்.பதுமிகா வெள்ளிப் பதக்கத்தையும் பருத்தித்துறை பிரதேச செயலக இளைஞர் அணியை பிரதிநிதித்துவம் செய்த ரி.பிருத்திகா வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)




## 'நூலக பிரீமியர் லீக் 1.0' சுற்றுப்போட்டி

## வாகை சூடியது Dewey Dragons

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக நலன்புரிச் சமூகத்தினால் நடாத்தப்பட்ட நூலக பிரீமியர் லீக் 1.0 துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டியில் Dewey Dragons அணியானது வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது. இரண்டாம் இடத்தை Cutter Challengers அணியும், மூன்றாம் இடத்தை Brown Beaters அணியும் பெற்றுக் கொண்டன.

இச் சுற்றுப் போட்டியில் ஆட்ட நாயகன், தொடர் ஆட்ட நாயகன் மற்றும் அதிகூடிய விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரர் போன்ற விருதுகளை Dewey Dragons அணியின் வீரர் மா.தங்கராசா பெற்றுக் கொண்டார். அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரராக Cutter Challengers அணியின் வீரர் ம.பிரபுராம் தெரிவு செய்யப்பட்டார்.


இச் சுற்றுப் போட்டியில் விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் திரு.வி.காண்டீபன் மற்றும் பிரதி நூலகர் கலாநிதி சி.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (3)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





ஈழத்துச் சிதம்பரம் எனப்போற்றப்படும் காரைநகர் திண்ணபுரம் ஸ்ரீசுந்தரேஸ்வரர் திருக்கோவில் மகாகும்பாபிஷேகம் நேற்றையதினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. இக்கும்பாபிஷேகத்தில் தமிழகத்தின் ஆதீனங்கள், மடப்பீடாதிபதிகள், ஓதுவார் மூர்த்திகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (படம்:சிவசாந்தன்)



மயிலிட்டி வீரமாணிக்க தேவன் துறை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலயத்தில் புஸ்பக விமான வாகனம் வெள்ளோட்டம் கடந்த வியாழக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (படம்: மகாலிங்கம்)

# அக்கராய மன்னனின் நினைவேந்தல் நிகழ்வு



(தருமபுரம்)

அக்கராய மன்னனின் நினைவேந்தல் நிகழ்வு நேற்றைய தினம் கிளிநொச்சி அக்கராயன் பகுதி யில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (8-315-316)





நம்பிக்கையின் பெறுமதி அபரிமிதமானது என்பதை மீண்டும் மீண்டும் உறுதி செய்து, காப்புறுதித்துறையின் மிகப் பிரம்மாண்டமான போனஸ் தொகையாக இது மாறியதற்கு, ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களாகிய உங்கள் அனைவரினதும் பெறுமதிகள் ஒன்றிணைந்தமையே பெரும் காரணமாக அமைந்துள்ளது. 6 தசாப்த காலங்களுக்கும் மேலாக ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களுக்கும், ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் மிகப் பிரம்மாண்டமான போனஸ் தொகையை வழங்கியுள்ள ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ் லைஃப் ஆகிய நாம், இன்று போலவே எதிர்காலத்திலும் உங்களைக் காத்து நாட்டினைக் காத்திடுவோம்.

1377 www.sliclife.com

SLIC LIFE

(C-531)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எல்நினோ தாக்கத்தால் வறண்ட வானிலை தொடரும்

## வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

**எல் நினோ தாக்கம் மற்றும் தென்மேற்குப் பருவமழை வலுவிழந்தமை காரணமாக அடுத்த மாதமும், பின்னர் ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலப்பகுதியிலும் நாடு முழுவதும் வறண்ட வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் விஜேமன்னே தெரிவித்துள்ளார்.**




எனினும், ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த புதுப்பிக்கப்பட்ட வானிலை விபரங்கள் இன்றைய தினம் வெளியிடப்படும்.

எல் நினோ பாதிப்புகளைக் குறைப்பது குறித்து சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிக படபெந்தி தலைமையில் அமைச்சகத் தலைவர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதன்போது சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை ஆராய்ந்து, அடுத்த இரு வாரங்களுக்குள் "தேசிய செயல் திட்டம்" அறிவிக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார். (8)

# தர்பூசணிச் செய்கை அறுவடை!



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் தர்பூசணிச் செய்கையின் முதலாவது அறுவடை அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

இவ் அறுவடைச் செயற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஊழியர் நலன்புரிச் சங்கத்தினர் மற்றும் உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நவீன விவசாய முறையில் பல்வேறு பயிர்கள் பயிரிடப்பட்டன. அதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தர்பூசணிச் செய்கையே தற்போது சிறந்த விளைச்சலை வழங்கியுள்ளது.

இந்த நவீன விவசாயத்தைக் கற்றுக்கொள்ள விரும்பும் விவசாயிகள், பசுமை வீட்டு விவசாயத்தை முயற்சிக்க விரும்பும் இளைஞர்கள், சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கிளிநொச்சி மாவட்டச் செயலக அலுவலகத் தோட்டத்திற்கு வருகை தந்து பார்வையிடலாம் என மாவட்டச் செயலக ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (8)

# வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு புதிய பொறுப்பதிகாரி நியமனம்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு புதிய பொறுப்பதிகாரியாக சீ.ஏ.ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய W.கொஸ்தாவுக்கு வருடாந்த இடமாற்றம் கிடைக்கப்பெற்ற நிலையில் புதிய பொறுப்பதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். (8-104)

# சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு யாழில் உந்துருளிப் பேரணி



(அராலி)

104 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு உந்துருளி பேரணி யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பேரணியானது சாவகச்சேரியில் 'ஆரம்பமாகி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தை வந்தடைந்தது.'

யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையின் தலைவர் ப.கேசவதாசன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கூட்டுறவாளர்கள், பணியாளர்கள், வங்கி அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (8-104)

# போலியான தயாரிப்பு பட்டிகளுடன் விற்பனை செய்யப்பட்ட எருமைத் தயிர்கள் சுகாதார பரிசோதகரால் அழிப்பு!

(கரணவாய்)

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் பொதுமக்களை ஏமாற்றி போலியான தயாரிப்பு பட்டிகளுடன் விற்பனை செய்யப்பட்ட பெருமளவான எருமை தயிர்கள் பருத்தித்துறை நகர சபை பொதுச்சுகாதார பரிசோதகரினால் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டதுடன் மோசடி வியாபாரத்தில் ஈடுபட்ட வெளிமாவட்ட வியாபாரிகள் கடும் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை நகர் பிரதான வீதியில் கடந்த சில நாட்களாக வெளிமாவட்டத்தில் இருந்து வருகைதந்த வியாபாரிகள் இருவர் எருமை தயிர் சட்டிகள், நெய் போன்றவற்றை விற்பனை செய்து வந்துள்ளனர். இது தொடர்பில் பொதுமகனினால் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கமைவாக பருத்தித்துறை நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஸ் தலைமையிலான குழு கடந்த வெள்ளிக்கிழமை நேரில் சென்று விசாரணை நடத்தியதுடன் ஆய்வும் மேற்கொண்டது.

இதன்போது, பொதுமக்களினை ஏமாற்றும் வகையில் பொதி செய்யப்பட்டதும் உரிய நியமங்களிற்கு அமைவாக களஞ்சியப்படுத்தாமலும் தயிரினை விற்பனை செய்யும் நோக்குடன் வாகனத்தில் கொண்டு சென்றமை உறுதி செய்யப்பட்டது.

இதை யடுத்து வெளிமாவட்டத்தினை சேர்ந்த இருவரினது தயிர்ப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அவர்கள் வைத்திருந்த அனைத்து தயிர்ப் பொருட்களும் அவர்கள் முன்னிலையிலேயே பொதுச்சுகாதார பரிசோதகரால் அழிக்கப்பட்டது. அத்துடன் குறித்த இரு வியாபாரிகளும் கடும் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 200 | -- |
| பச்சைமிளகாய் | 600 | 550 | 600 | 700 | 550 |
| தக்காளி | 400 | 350 | 400 | 350 | 620 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 200 | 250 | 150 |
| கோவா | 200 | 250 | 300 | 250 | 250 |
| கரட் | 400 | 350 | 400 | 400 | 380 |
| பூசணி | 150 | 180 | 150 | 200 | 100 |
| புடோல் | 120 | 200 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 150 | 150 | 100 | 200 | 150 |
| சின்ன வெங்காயம் | 400 | 380 | 300 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 200 | 200 | 300 |
| பாகற்காய் | 800 | 1000 | 1500 | 1200 | 1400 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 300 | 250 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 300 | 350 | 400 |
| பயற்றங்காய் | 350 | 200 | 200 | 350 | 350 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 400 | 350 |
| பீற்றூட் | 350 | 400 | 500 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 500 | 450 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 450 | 500 | 500 | 450 | 350 |
| போஞ்சி | 650 | 450 | 600 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 200 | 160 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 80 | .100 | 80 | 80 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 500 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 130 | 100 | 100-140 | 110 |
| இராசவள்ளி | 400 | 400 | 400 | 350 | 350 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 400 | 500 | -- |
| முள்ளங்கி | 250 | 160 | 200 | 200 | 180 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 60 | -- |
| வல்லாரை | 60 | 70 | 100 | 100 | -- |
| ஈரப்பலா | 250 | -- | 100 | 250 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நிலக்கரி கொள்முதல் முறைகேடு விசாரணை

# இன்று முதல் சாட்சியப்பதிவு ஆரம்பம்!

**(கொழும்பு)**

**நிலக்கரி கொள்முதல் தொடர்பான முறைகேடுகளை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு, இன்று முதல் சாட்சியங்களைப் பதிவு செய்யும் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது.**

இந்த ஆணைக்குழுவின் முன்னிலையில் முதலாவதாகச் சாட்சியமளிப்பதற்காக தற்போதைய எரிசக்தி அமைச்சின் செயலாளர் ஜி. எம். ஆர். டி. அபோன்சோ அழைக்கப்பட்டுள்ளார்.

அவரைத் தொடர்ந்து, எரிசக்தி அமைச்சின் கொள் முதல் குழு உறுப்பினர்கள், தேசிய கொள்முதல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் ஆகியோரும் சாட்சியமளிப்பதற்காக ஆணைக்குழுவினால் அழைக்கப்பட்டுள்ளனர்.

சாதாரண நடைமுறைகளின்படி, ஆணைக்குழு முதற்கட்டமாக சாட்சிகளிடமிருந்து சாட்சியங்களை விசாரணை செய்யும்.

அதன் பின்னர், முறைகேடுகளுடன் தொடர்புடைய குறிப்பிட்ட நபர்கள் அடையாளம் காணப்பட்டதும், அவர்கள் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டு ஆணைக்குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்.

ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவினரால் இது வரை 100 இற்கும் மேற்பட்ட நபர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவர்களில் முன்னாள் எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடியிடம் இரண்டு நாட்களில் சுமார் 6 மணித்தியாலங்கள் விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

அத்துடன், மற்றொரு முன்னாள் எரிசக்தி அமைச்சரான பாட்டலி சம்பிக்க ரணவக்கவிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (8)




கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது. (படம்-தேவானந்தன்)

## மரணத்தில் முடிந்த பிறந்த நாள் கொண்டாட்டம்!

(கொழும்பு)

கடவத்த, இஹல பியன்வில பகுதியில் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் கடவத்த பகுதியைச் சேர்ந்த 54 வயதுடையவர் என தெரிய வந்துள்ளது.

குறித்த நபர் தனது சகோதரர் .ஒருவரின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டிருந்த போது, அங்கு ஏற்பட்ட முரண்பாடு முற்றியதன் காரணமாகவே இந்தக்கொலை நடந்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. மேலும், இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த மற்றொரு நபர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (8)


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

### பருத்தித்துறை வீதி, வட்டாரம் -01

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01, பருத்தித்துறை வீதியிலுள்ள ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் .இதுவரையில் பதிவு செய்யப்படவில்லை.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் ஓர் பகுதியினை கனகசபை அளகுப்பிள்ளை பெண் செல்வராணி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியும் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3311/10.07.1954ஆம் இலக்க உறுதியால் முருகேசு நாராயணப்பிள்ளையும், பண்டாரம் கந்தையாவும் பெண் தையல்முத்துவும் ஆகியவர்களிடமிருந்து சீதனப்பொருத்தமாக பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

அளகுப்பிள்ளை மகள் சுசிகலா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியும் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 14409/ 14.05.1987ஆம் இலக்க உறுதியால் குறித்த கனகசபை அளகுப்பிள்ளை கைம்பெண் செல்வராணி ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

துரைச்சாமி நடராசா பெண் சுசிகலா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.சி.கணேசலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3159/13.12.1989ஆம் இலக்க உறுதியால் நாராயணபிள்ளை சிவராசாவும், நாராயணப்பிள்ளை நடராசாவும் ஆகியவர்களிடமிருந்து பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் மற்றைய பகுதியினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

இராசலிங்கம் மயூரனும் பெண் ஷாசினியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு சாருஜா சிவநேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3160/03.12.2025ஆம் இலக்க உறுதியால் குறித்த துரைச்சாமி நடராசாவும் பெண் சுசிகலாவும் ஆகியவர்களிடமிருந்து குறித்த முழு ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: "வேளைக்கரையன்"
இறை: தொல்புரம்
விஸ்தீரணம்: 01 ஏக்கர் 03 றூட்
எல்லைகள்: கிழக்கு - 1406 ஆம் இலக்க பூர்வாங்க நில அளவைப்படத்தில் C அட்சரமிடப்பட்ட 123அம் இலக்க துண்டுக்காணி வடக்கு மேற்படி நில அளவைப்படத்தில் காட்டப்பட்ட 4915, 4904, 4877ஆம் இலக்க துண்டுக்காணிகள் மேற்கு மேற்படி நில அளவைப்படத்தில் R அட்சரமிடப்பட்ட 123ஆம் இலக்க துண்டுக்காணி தெற்கு சின்னத்தம்பி குமரேசுவின் ஆதனம்

குறித்த இராசலிங்கம் மயூரனும் பெண் ஷாசினியும் ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இராசலிங்கம் மயூரனும் பெண் ஷாசினியும் ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(7590)



## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

### ஆதன இலக்கம் 96, கனகரத்தினம் வீதி, வட்டாரம் 09

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 09, கனகரத்தினம் வீதி, ஆதன இலக்கம் 96 என்ற ஆதனத்திற்கான ஆதன வரிப்பதிவேட்டில் சிவசம்பு ஜெயவீரசிங்கம் என்ற பெயர் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்திற்கு பெயர்மாற்றத்திற்காக செல்வராஜா கிருஷ்ணதாசன் என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனம் மிகுதியாதனமும் ஆரம்பத்தில் கொழும்பு வலய பிரசித்த நொத்தாரிசு பெ.வ.சிறீறங்கன் முன்பாக 22.09.2008 திகதியில் 3260 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல் உறுதியின் பிரகாரம் சிவசம்பு ஜெயவீரசிங்கம் என்பவர் சொந்தக்காரராக வந்திருந்ததாக வெளிப்படுத்தியிருந்தார். குறித்த சிவசம்பு ஜெயவீரசிங்கம் பின்னர் கொழும்பு வலய பிரசித்த நொத்தாரிசு பெ.வ.சிறீரங்கன் முன்பாக 23.05.2009 திகதியில் 3339 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட நன்கொடை உறுதியால் மேனகா ஹேமன்கனி சண்முகநாதன் என்பவருக்கு நன்கொடை வழங்கியிருந்தார். பின்னர் குறித்த ஆதனத்தினை மேனகா ஹேமன்கனி சீண்முகநாதன் பிரசித்த நொத்தாரிசு வை.த.சிவலிங்கம் முன்பாக 07.05.2010 திகதியில் 1169 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதியால் சின்னத்தம்பி பாஸ்க்கராவுக்கும் பெண் அமுதினி அஞ்சலினா என்பவர்களுக்கு அறுதியாக விற்றிருந்தார். குறித்த சின்னத்தம்பி பாஸ்க்கரா மற்றும் பெண் அமுதினி அஞ்சலினாவும் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு அருட்பிரகாசம் நிரோஷன் முன்பாக 2022.06.25 திகதியில் 305 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதியால் இரத்தினதாசன் ரூபலக்ஸ்மன் என்பவருக்கு அமுதினி அஞ்செலினா என்பவரின் சீவிய உரித்துக்கமைவாக நன்கொடை வழங்கியிருந்தனர்.

பின்னர் சின்னத்தம்பி பாஸ்க்கராவும் பெண் அமுதினி அஞ்சலினாவும், இரத்தினதாசன் ரூபலக்ஸ்மன் ஆகியோர்கள் பிரசித்த நொத்தாரிசு அபிராமி குகதாசன் முன்பாக 2025.10.10 திகதியில் 41 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதியால் செல்வராஜா கிருஸ்ணதாசன் என்பவருக்கு அறுதியாக விற்றிருந்தனர்.

இது தற்போது உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ்.மதியழகன் அவர்களால் 2024.05.18 திகதியில் 3072 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 3 மற்றும் 4 எனச் சுட்டப்பட்ட ஆதனமாகும்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு.
ஆதனப்பெயர் : **வட்டுவாத்தை**
இறை: வட்டுக்கோட்டை தெற்கு இறை
விஸ்தீரணம் : நிலப்பரப்பு 3 குளி 0.07

எல்லைகள் **கிழக்கு:** சோமசுந்தரம் நடராஜலிங்கத்தினாதனம், **வடக்கு:** 3072 ஆம் இலக்கப் படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டவாதனம், **மேற்கு:** துண்டு 2. **தெற்கு:** வீதி

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக யாராவது ஆட்சேபனை இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்வராஜா கிருஷ்ணதாசன் என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எந்தப் பொறுப்பிற்கும் வலிமேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


**தவிசாளர்/செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(7970)


Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# பாரதம்

# ஐரோப்பாவில் நிலவும் வெப்ப அலை 3700 ஐக் கடந்த உயிரிழப்புகள்




(பாரிஸ்)

ஜூன் மாத இறுதியில் ஐரோப்பாவில் வீசிய கடுமையான வெப்ப அலை காரணமாக பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் 3,700 இற்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

காலநிலை மாற்றமே இந்த அதீத வெப்பநிலைக்கு முக்கியக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்சில் மட்டும் 2,025 இற்கும் கூடுதலான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. குறிப்பாக 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் முதியவர்கள் கடுமையாகப் பாதிக்க-ப்பட்டுள்ளனர்.

ஜூன் 22-28 காலகட்டத்தில் வீடுகளில் நிகழ்ந்த இறப்புகள் 91 சதவீதமாக அதிகரித்துள்ளன.

பெல்ஜியத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் 1,200 இற்கும் கூடுதலான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

அத்துடன் நெதர்லாந்தில் 480 இற்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

இந்த வெப்ப அலையை நிபுணர்கள் மிகத் தீவிரமான ஒன்றாக விவரித்துள்ள நிலையில், முழுமையான தரவுகள் கிடைக்கும்போது உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (3)

# ட்ரம்ப் -நெதன்யாகு இடையே விரைவில் நேரடி சந்திப்பு!

## இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த தீர்மானம்





(வோஷிங்டன்)

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோருக்கு இடையே அண்மையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் குறித்த செய்திகளுக்கு மத்தியில், இருவரும் விரைவில் அமெரிக்காவில் நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த உடன்பட்டுள்ளனர்.

வெள்ளிக்கிழமை இரு தலைவர்களுக்கும் இடையே இடம்பெற்ற தொலைபேசி உரையாடலைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பிரதமரின் அலுவலகம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் 250 ஆவது ஆண்டு சுதந்திர தினநிறை வையொட்டி ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, வோஷிங்டன் மற்றும் ஜெருசலேம் நகரங்களுக்கு இடையிலான நெருக்கமான உறவையும் பாராட்டியுள்ளார்.

இதன் போது, உலகின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது அமெரிக்காவே என்றும், இரு நாடுகளுக்கும் இடையிலான பலமான பிணைப்பை இஸ்ரேல் பெரிதும் மதிப்பதாகவும் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இவர்களது சந்திப்பு இடம்பெறவுள்ள திகதி அல்லது இடம் குறித்த விபரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

ஈரான் மற்றும் பிராந்திய பதற்ற தணிப்பு முயற்சிகள் தொடர்பாக, கடந்த சில வாரங்களாக ட்ரம்ப் மற்றும் நெதன்யாகு ஆகியோருக்கு இடையே கருத்து வேறுபாடுகள் நிலவி வருவதாக வெளியான அறிக்கைகளுக்கு மத்தியில் இந்தத் தொலைபேசி அழைப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

குறிப்பாக, லெபனானில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் அமெரிக்காவின் இராஜதந்திர முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருப்பதாக ஜனாதிபதி ட்ரம்ப் பகிரங்கமாக அதிருப்தி வெளியிட்டிருந்தார்.

இருப்பினும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இடையிலான மூலோபாயம் வலுவாக உள்ளதாகவும், பிராந்திய விவகாரங்களில் இரு நாடுகளும் நெருக்கமான ஒருங்கிணைப்புடன் செயற்படுவதாகவும் இருதரப்பு அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.(3)

# அமெரிக்க சுதந்திர தினம் பிரதமர் மோடி வாழ்த்து



(டில்லி)

அமெரிக்காவின் 250 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அந்நாட்டு மக்களுக்குப் பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே பகிரப்பட்ட ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தின் மீதான மதிப்பு உலகளாவிய நன்மைக்கான ஒரு மிகப் பெரிய சக்தியாக விளங்குவதாகப் பிரதமர் மோடி தனது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தனது எக்ஸ் பக்கத்தில்,அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"140 கோடி இந்திய மக்களின் சார்பில், அமெரிக்காவின் வரலாற்றுச் சிறப்புமிக்க 250ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும், அமெரிக்கப் பொதுமக்களுக்கும் எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியா - அமெரிக்கா இடையிலான இருதரப்பு உறவு என்பது வெறும் ராணுவம் மற்றும் பொருளாதார ரீதியிலான கூட்டாண்மை மட்டுமல்ல.

ஜனநாயகம், சுதந்திரம், சட்டத்தின் ஆட்சி மற்றும் தனிமனித சுதந்திரத்திற்கு வழங்கப்படும் முக்கியத்துவம் போன்ற இரு நாடுகளுக்கும் பொதுவான கொள்கைகளே இந்தத் தசாப்த கால நட்புறவின் உண்மையான பலமாகும்.

இந்த உயர்வான விழுமியங்கள் தான் இரு வல்லரசு நாடுகளின் நட்பை உலகளாவிய அமைதி மற்றும் நன்மைக்கான ஒரு பிரிக்க முடியாத சக்தியாக மாற்றியுள்ளது.

வரவிருக்கும் அடுத்த 250 ஆண்டுகள் அமெரிக்காவிற்குப் பன்மடங்கு செழிப்பையும், அமைதியையும், தொடர் முன்னேற்றத்தையும் கொண்டு வரட்டும்.

இந்தியா-அமெரிக்கா இடையிலான கூட்டாண்மை உலகிற்குப் புதிய வழியைக் காட்டட்டும்" என்று அவர் வாழ்த்தியுள்ளார். (3)

# டெஹ்ரா... உச்சக்...

(டெஹ்ரான்)....
ஈரானின் முன்னா...
வர் அயதுல்லா அ...
இறுதிச்சடங்கில் ப...
உலகத் தலைவர்க...
திரளுவதால் அ...
தும் பாதுகாப்பு தீ...
டுள்ளது.

ஈரான் - அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு இடையே கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி தொடங்கிய போர், தற்போது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

முன்னதாக, போர் தொடங்கிய முதல் நாளிலேயே அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்

# பாகிஸ்தான் இ... தற்கொலைப்ப...

## 30 வீரர்கள் உ...



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தற் கொலைப்படைத் தாக்குதலில் 30 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக தகவல் கள் வெளியாகி உள்ளன.

பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தானின் குவாதர் மாவட்டத்தில் உள்ள கட லோரக் காவல்படை முகாம் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வெடிகுண்டுகள் நிரப்பப் பட்ட வாகனம் ஒன்று அந்த முகாம்மீது மோதி வெடிக்க வைக்கப்பட்டது. இந்த தாக்குதலுக்கு பலூச் விடுதலைப் படை அமைப்பு பொறுப்பேற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கமேனியின் இறுதிச்சடங்கு

# ...ரானில் திரளும் உலகத் தலைவர்கள்

# ...க்கட்ட பாதுகாப்பில் ஈரான்

...னாள் உச்சத் தலை ... அலி கமேனியின் ...ல் பங்கேற்பதற் காக ...ர்கள் டெஹ்ரா னில் ... அந்த நாடு முழுவ... தீவிரப்படுத்தப்பட்...



...திய கூட்டு வான்வழித் தாக்குதலில் அயதுல்லாஅலிகமே னி கொல்லப்பட்டார். அவரின் இறுதிச்சடங்கு நேற்று முன் தினம் தொடங்கி நடைபெற்று வருகிறது.

தலைநகர் டெஹ்ரானில் உள்ள கிராண்ட் மொசல்லா எனப்படும் மிகப் பெரிய மசூதிக்குள் சவப்பெட்டியில் வைக்கப்பட்டுள்ள கமேனியின் உடலுக்கு உலகெங்கிலும் உள்ள சுமார் 100 நாடுகளைச் சேர்ந்த முக்கிய தூதர்கள், பிரதிநிதிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

ஆகையால், டெஹ்ரானில் பொது மற்றும் தனியார் அலுவலகங்கள் மூடப்பட்டு, முக்கிய சாலை களில் பொதுமக்கள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வான்வெளியும் தற்காலிகமாக மூடப்பட்டு, உச்சகட்ட பாதுகாப்புகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (3)

## ...இராணுவம் மீது ...படைத் தாக்குதல்

### ...ர் உயிரிழப்பு



இந்த தாக்குதலில் கடலோர படை முகாம் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளதுடன் 30 பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் ஏராளமானோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்கொலைப்படைத் தாக்குதல் தொடர்பான 43 வினாடி கொண்ட காணொளி ஒன்றையும் வெளியிட்டது. அதில், வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட பாரவூர்தி ஒன்று முகாமிற்குள் நுழைவதும், அதைத் தொடர்ந்து ஒரு பெரிய தீப்பிழம்பு எழுவதும் பதிவாகி உள்ளது. (3)

### வாகன என்ஜின்கள் பழுதடையும் அபாயம்

## இந்தியாவிடம் இருந்து பெற்றோல் வாங்க பூட்டான் மறுப்பு

(திம்பு)

**இந்தியா வழங்கிய 20 சதவீதம் எத்தனோல் கலக்கப்பட்ட பெற்றோல் விநியோக சலுகையை பூட்டான் நிராகரித்துள்ளது.**




இந்தியாவில் தற்போது E20 பெற்றோல் கட்டாயமாக்கப்பட்டு வருவதும், அது வாகனங்களின் செயல்திறன் மற்றும் எரிபொருள் திறனை பாதிப்பதாக இந்தியா முழுவதும் பரவலான விவாதங்களும் எதிர்ப்புகளும் கிளம்பியுள்ள நிலையில், பூட்டானின் இந்த அதிரடி தீர்மானம் சர்வதேச அளவில் கவனத்தை பெற்றுள்ளது.

இந்திய சந்தையில் சாதாரண பெற்றோல் கிடைக்கும் வரை தங்களுடைய நாட்டுக்கு அதனையே தொடர்ந்து விநியோகம் செய்ய வேண்டும் என பூட்டான் அரசாங்கம் இந்தியாவிடம் உத்தியோக பூர்வமாக கேட்டுக் கொண்டுள்ளது.

தூய்மையான எரிபொருளை பூட்டான் எதிர்க்கவில்லை என்றாலும், அதன் புவியியல் கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பக் குறைபாடுகளினாலேயே இந்த சலுகை நிராகரிக்கப்பட்டுள்ளது.

பூட்டான் போன்ற மலைப்பாங்கான மற்றும் செங்குத்தான நிலப்பரப்பில் அமைந்துள்ள பழைய எரிபொருள் சேமிப்பு கிடங்குகளில் கசிவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதால் எரிபொருள் தரம் பாதிக்கப்பட்டு வாகனங்களின் என்ஜின்கள் பழுதடையும் அபாயம் உள்ளது.

மேலும், செங்குத்தான மலைப்பாதைகளில் வாகனங்களை இயக்குவதற்கு அதிக என்ஜின் வேகம் தேவைப்படும் நிலையில், எத்தனோல் கலந்த பெற்றோல் அதற்கு உகந்ததாக இருக்காது என பூட்டான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரச நெல் களஞ்சியசாலைகளை திறக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

**கொழும்பு**

**நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான அரச நெல் களஞ்சியசாலைகளை உடனடியாகத் திறக்குமாறு விவசாயிகள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அத்துடன், தமது நெல்லுக்கு முறையான நியாயமான விலையொன்றைப் பெற்றுத் தருமாறும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சிறுபோக நெல்லுக்கான சான்று விலையொன்றை வர்த்தக அமைச்சு கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்த போதிலும், அந்த விலை தமக்கு போதுமானதாக இல்லை என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான ஹிங்குராண - பெரனிகம பகுதியில் அமைந்துள்ள அரசாங்க நெல் களஞ்சியசாலை இதுவரை திறக்கப்படவில்லை எனவும் விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். (8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1996- இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
உயரம்: 5'7"
தகைமை/தொழில்-BSC, PHD, London
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: B/17037

பிறப்பு:1987- இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்- 5'8"
தகைமை/தொழில்- A/L,Australia
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/17040

பிறப்பு:1973-இந்து
உயரம்: 5'7"
தகைமை/தொழில்- Business, London
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: B/17042

பிறப்பு: 1987- இந்து
நட்சத்திரம்:சுவாதி
2இல்செவ்
உயரம்:6'2"
தகைமை/தொழில்-A/L,நில அளவை உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/17044

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்: சதயம்
கி-பா- 59
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: CBF, BBM, Banking Assistant
எதிர்பார்ப்பு : உத்தியோகம்
தொ.இ: B/17048

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்-திருவாதிரை
கி.பா - 10 1/2
உயரம்- 5'3"
தகைமை/தொழில்: BFA
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/17061

பிறப்பு-2001-இந்து
நட்சத்திரம்: சதயம்
கி-பா-33
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA, Work(pvt)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/17065

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்-சதயம்
1இல்செவ்
கி.பா -75
உயரம்-5;4"
தகைமை/தொழில்: BSC,Senior Business Analyst
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/17068

பிறப்பு- 1999-இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி-பா-13 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BCom
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/17072

பிறப்பு-1977- இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L,Manager (pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/17073

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 609

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## நல்ல நகைச்சுவை

ஒரு வீடு. கதவு மூடி இருக்கிறது. அந்த வெளிக்கதவிலே பூட்டு ஒன்று இருந்தது.

அந்தப் பூட்டை பூட்டாமல்விட்டுட்டாங்க போல இருந்தது. அதனாலே திறந்தபடியே அது தொங்கிக்கொண்டிருந்தது. தெரு வழியாக போய்க்கொண்டிருந்த ஒரு பையன் இதைப் பார்த்தான்.

உடனே மெதுவாக அந்தக்கதவின் அருகில் போகிறான். நைசா அந்த பூட்டை எடுத்து சட்டைப் பையிலே போட்டுக்கொண்டு நழுவி வருகிறான். கலைவாணர் என்.எஸ்.கே. கொஞ்ச தூரத்திலே இருந்து இதைப் பார்க்கிறார். இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் "தம்பி ! இங்கே வாப்பா!" என்று கூப்பிட்டார்.

அவனும் தான் திருடினதைக் காட்டிக் கொள்ளாமல் ரொம்ப சாதுவாக இவர் முன்பு வந்து நிற்கிறான். தம்பி! பையிலே என்ன இருக்கு என்று கேட்கிறார். அது-வந்து ஒன்றுமில்லையே என்கிறான் பையன். எங்கே.. காட்டு பார்க்கலாம் ! என்று சொல்லி அவன் சட்டைப்பையிலே கையை விட்டார். அதில் பூட்டு இருந்தது. கையும் களவுமாக பிடிபட்டுவிட்டான் அந்தப் பையன். ஐயா தெரியாமல் பண்ணி விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்றான்.

ஏண்டா எடுத்தாய் இதை?" என்கிறார்.

பசி-அதனாலேதான் எடுத்தேன். பழைய சாமான் கடையிலே போட்டால் இரண்டு ரூபா கிடைக்கும் சாப்பிடலாம் என்று நினைத்து எடுத்துவிட்டேன் என்று உண்மையைச் சொல்லி விட்டான் அந்தப் பையன்.

இவங்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் போது அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர் வெளியே வந்துவிட்டார் .கதவிலே பூட்டு இல்லாததைப் பார்த்தார். தெருவிலே கலைவாணர் ஒரு பையனிடம் பேசிக்கொண்டிருப்பதையும் பார்த்தார்.

அந்தப் பையன்தான் பூட்டை எடுத்திருப்பான். என்.எஸ்.கே. தான் அவனைக் கையும் களவுமாகப் பிடித்து வைத்திருக்கிறார் போல இருக்கிறது அப்படி என்று யூகம் பண்ணிக்கொண்டார்.

ரொம்ப ஆத்திரத்தோட அவர்களை நோக்கி நடந்தார். இதைக் கவனித்தான் பையன், கலைவாணரை மிகவும் பரிதாபமாகப் பார்த்தான். என்னைக் காட்டிக் கொடுத்து விடாதீர்கள் என்பது மாதிரி!

கலைவாணர் ஒரு கணம் யோசித்தார். இதுக்குள்ளே அந்த வீட்டுக்காரர் இவர்களை நெருங்கிப் பக்கத்திலே வந்துவிட்டார். கலைவாணர் சிரித்துக் கொண்டே அவரைப் பார்த்து "வாங்க.... வாங்க.. என்ன வீட்டுக்கதவிலே பூட்டைக் காணவில்லை என்று பார்க்கின்றீர்களா? கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி யாரோ ஒரு பையன் அந்தப் பூட்டை எடுத்துக்கொண்டு ஓடினான்... இதோ இந்தத் தம்பிதான் அவனை விரட்டிப் பிடித்து பூட்டைப்பறித்து திருப்பி எடுத்துக்கொண்டு வந்தான்.. நான் வாங்கி வைத்திருக்கிறேன். இந்தாங்க பூட்டு என்றார்.

பாவம் பையன், பையன் ரொம்பக் கஷ்டப்பட்டு ஓடிப் பிடித்திருக்கான். இவனுக்கு ஒரு, இரண்டு ரூபாய் கொடுத்து அனுப்புங்கள். டேய் தம்பி. ஐயா இரண்டு ரூபாய் கொடுப்பார் வாங்கிக்கிக் கொண்டு போ!" அப்படி என்றார். இதுதான் கலைவாணர்.

அவருடைய அந்தச் செயல் சிரிக்கவும் வைக்கிறது. சிந்திக்கவும் வைக்கிறது.. இல்லையா?

அதுதான் ஒரு நல்ல நகைச்சுவையின் இலக்கணம். சொந்த கஷ்டங்களைக் கூட அவர் எடுத்தக் கொள்ளும் விதம் இருக்கே. அது ஒரு தனி ரகம்..அவர் சிறைவாசம் முடிந்து வெளியிலே வந்த சமயம் ஒருத்தர் அவரிடம் போய்.. பார்த்தீர்களா..? தேவை இல்லாமல் இரண்டரை வருடம் நீங்கள் ஜெயிலிலே இருப்பது போல ஆகி விட்டதே. இது தலைவிதிதானே..?" அப்படி என்றார். கலைவாணர் அவரைப்பார்த்து.. இதற்குக் காரணம் விதிதான். ஆனால் தலைவிதி இல்லை... சட்டம் "சொல்கிற விதி என்றார். என்ன இப்படிச் சொல்கிறீங்கள்." என்றார் அவர்.

ஆமாம் குற்றவாளி என்று கண்டுபிடிப்பதற்கு வருடக்கணக்காக ஆகிறது... அதேமாதிரி... ஒருத்தரை நிரபராதி என்று கண்டுபிடிப்பதற்கும் வருடக் கணக்கு ஆகும்! அதை நாம் கண்டு கொள்ளக்கூடாது!" அப்படி என்று நிதானமாக பதில் சொன்னார் கலைவாணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாத்தீனியத்தின் பிடியில் மனிதரும் மண்ணும்; உடனடி நடவடிக்கை அவசியம்



திருமதி பிரதீபா சிவகுமார்
தலைவர், சிரேஸ்ட விரிவுரையாளர்
விலங்கியல் துறை, யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்.



செல்வி அ. ஜொஸ்லின் ஜனு
செய்முறை வழிகாட்டுநர்,
விலங்கியல் துறை, யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்

உலகில் மிகவும் ஆபத்தான ஆக்கிரமிப்பு தாவரங்களில் ஒன்றாகப் பாத்தீனியம் (Parthenium) hysterophorus) கருதப்படுகிறது. இது மிக வேகமாகப் பரவக்கூடிய, பொருளாதார ரீதியில் முக்கியத்துவமற்றதுமான ஒரு நச்சுத் தன்மை வாய்ந்த களைச்செடி (Invasive Weed) ஆகும்.

சிறிய வெள்ளை நிறப் பூக்களைக் கொண்ட இத்தாவரத்தின் தண்டு கிளைகளை கொண்டிருப்பதுடன், முழுச்செடியும் மென்மையான உரோமங்களால் மூடப்பட்டு 3-4 அடி உயரம் வரை வளரக்கூடியது.

வட அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்ட இத்தாவரம் இன்று பல நாடுகளில் வேகமாகப் பரவி, விவசாயம், மனித ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை விதைகளுடன் இந்தியாவிற்குள் நுழைந்ததாகக் கருதப்படும் இவ் ஆக்கிரமிப்பு களை, 1987 ஆம் ஆண்டில் இந்திய அமைதிகாக்கும் படையினர் இலங்கைக்கு வருகை தந்தபோது, தமது உணவுத்தேவைக்காக கொண்டு வந்த செம்மறி ஆட்டின் உரோமத்துடன் பாத்தீனியத்தின் வித்துக்கள் ஒட்டி வந்து இலங்கையில் பரவியதாக நம்பப்படுகின்றது.

நாம் திரும்பும் திசையெல்லாம் காணப்படும் இந்தியக் களையான பாத்தீனியம், அதிக வெப்பநிலையையும் தாங்கி வளர்ந்து இன்று விளைநிலம் தாண்டி, வீதியோரங்கள், கைவிடப்படட நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், போன்ற இடங்களில் பூத்துக் குலுங்குகின்ற பரிதாப நிலைமை வடக்கில் தோன்றியுள்ளது.

ஒரு பாத்தீனியச் செடி 15,000 முதல் 100,000 வரையிலான விதைகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. இவ்விதைகள் காற்று, நீர், கால்நடைகள், மனிதர்களின் காலணிகள், வாகனங்கள் மற்றும் விவசாய இயந்திரங்கள் மூலம் எளிதில் பரவுகின்றன. மேலும், மண்ணில் பல ஆண்டுகள் உயிர்த்திறனுடன் நிலைத்திருக்கும் தன்மை கொண்டதால், இதனை முழுமையாக இல்லாது ஒழிப்பது மிகவும் கடினமாகின்றது.

இது நீர், உணவு மற்றும் இடத்துக்காக பயிர்களுடன் கடுமையாக போட்டியிடுவதுடன் ஊட்டச்சத்துக்களையும் அதிகளவில் உறிஞ்சுவதால், ஏனைய பயிர்களின் வளர்ச்சியும் விருத்தியும் பாதிப்படைவதுடன், உரிய காலத்தில் பயிர்கள் எதிர்பார்த்த விளைச்சலைக் கொடுக்காது போகின்றன.

சுற்றுச்சூழல் ரீதியாகவும் பாத்தீனியம் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இது உள்ளூர் தாவர இனங்களுடன் போட்டியிட்டு பிற தாவரங்கள் வளர முடியாத நிலையை உருவாக்கியுள்ளது. இதனால் பல உயிரினங்களின் வாழிடங்கள் சீர்குலைவதுடன், இயற்கைச்சூழலின் சமநிலையும் பாதிக்கப்படுகின்றது.

மேலும், பார்த்தீனியம் வளரும் போது அதன் வேர்களால் சுரக்கப்படுகிற பாத்தீனின் (Parthenin) போன்ற உயிர் இரசாயனங்கள் மண்ணில் கலந்து, அருகிலுள்ள தாவர விதைகளின் முளைதிறனையும் அத்தாவர வேர்களின் வளர்ச்சியையும் தடுக்கின்றன. இதன் விளைவாக உள்ளூர் தாவரங்கள் படிப்படியாக அழிக்கப்பட்டு, பாத்தீனியம் மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் நிலைமை உருவாகி வருகின்றது.



வெவ்வேறு பயிர்களில் வலுவான உடலியல் மற்றும் தாவர உயிரிரசாயன விளைவுகளை (Allelopathic effects)மறைமுகமாக ஏற்படுத்துவதனால் பயிர்களின் விளைச்சலைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல், விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பையும் ஏற்படுத்துகின்றது.

அது மட்டுமன்றி, இக்களையின் அபரிமிதமான பெருக்கத்தினால் பல விவசாய நிலங்களின் உற்பத்தித் திறனும் குறைகின்றது. களையை நீக்குவதற்கான செலவுகள் அதிகரிப்பதுடன், மேய்ச்சல் நிலங்கள் பாதிக்கப்படுவதால் கால்நடை வளர்ப்பும் சிரமமடைகின்றது. இதன் காரணமாக விவசாய உற்பத்தி குறைவதுடன், விவசாயிகளின் வருமானமும் பாதிக்கப்படுகின்றது.

மாடுகள் மற்றும் ஆடுகள் இச்செடியை மேய்வதால், வாய்ப்புண், சமிபாட்டுக் கோளாறு மற்றும் தோல் நோய்கள் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். கண்ணில்படுவதனால் கண் எரிச்சல் மற்றும் பார்வை குறைபாடு ஏற்படும். அத்துடன் கால்நடைகள் இதனை அதிகளவில் உட்கொள்ளும் போது பாலின் தரம் பாதிக்கப்படுவதுடன் கசப்புத்தன்மையும் ஏற்படக் கூடும். இதைத் தொடர்ந்து அதிகளவு உட்கொண்டால் கடுமையான நோய் ஏற்படுவதுடன், உடல் எடை குறைந்து, கால்நடைகளின் உற்பத்தித்திறனும் பாதிக்கப்படலாம். இக்களையினுடைய துர்வாசனையால் பொதுவாக கால்நடைகள் உணவு உண்ண நாட்டம் காட்டாது. பாத்தீனியம் கலந்த புல்லினை இறைச்சிக்காக வளர்க்கும் கால்நடைகள் உட்கொண்டால் அவற்றின் இறைச்சியில் சிவப்புப் புள்ளிகள் மற்றும் இரத்தக் கறை படிவுகள் காணப்படும்.

பாத்தீனியம் மனித ஆரோக்கியத்திற்கு தீங்கானது. இதன் பூக்களின் மகரந்தத் துகள்கள் காற்றில் பரவி ஆஸ்துமா, சுவாச ஒவ்வாமை, தும்மல், மூச்சுத்திணறல் மற்றும் சைனஸ் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன.

இச்செடியை நேரடியாகத் தொடுவதால் தோல் அழற்சி, அரிப்பு மற்றும் பல்வேறு ஒவ்வாமை நோய்கள் உருவாகலாம். பாத்தீனியம் நிறைந்த வயல்களில் வேலை செய்யும் போது, காற்றில் கலந்திருக்கும் பாத்தீனிய இரசாயனப் பொருட்களை சுவாசிப்பதால் தலைவலி, மயக்கம் மற்றும் காய்ச்சல் போன்ற பல்வேறு நோய்கள் ஏற்படும்.

இயற்கை சூழலுக்கும், விவசாய சூழல் தொகுதிக்கும், அங்கு வாழும் மனிதர்கள் மற்றும், கால் நடைகளுக்கும், அச்சுறுத்தல்களையும், மற்றும் பாதிப்புக்களையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற, பச்சைப் புற்று நோயான பாத்தீனியத்தை கட்டுப்படுத்துவது என்பது எளிதான செயல் அல்ல. எனவே, ஆரம்ப நிலையிலேயே தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் அவசியம். செடிகள் பூக்கும் அல்லது விதையிடும் முன்பே கையுறை மற்றும் முகக்கவசம் அணிந்து வேருடன் பிடுங்கி அகற்ற வேண்டும். அகற்றப்பட்ட செடிகளை திறந்த வெளியில் வீசாமல், விதைகள் பரவாத வகையில் பாதுகாப்பாக அழிக்க வேண்டும். அதிகளவில் பரவியுள்ள பகுதிகளில் பொருத்தமான களை கொல்லிகளைப் பயன்படுத்தலாம். மேலும், ஒருங்கிணைந்த களை முகாமைத்துவமும் பயனுள்ளதாகும்.

இதில், 2019-2020 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்கில் முதன்முதலாக பதிவுசெய்யப்பட்ட Zygogramma bicolorata என்ற இலை வண்டு மற்றும் Cassia tora, Cassia sericea போன்ற போட்டித் தாவரங்கள் பாத்தீனியத்தின் வளர்ச்சியையும் பரவலையும் இயற்கையாகக் கட்டுப்படுத்த உதவுகின்றன என அறியப்பட்டுள்ளது.

பாத்தீனியம் புதிய பகுதிகளுக்குப் பரவுவதைத் தடுப்பது மிகவும் முக்கியமானது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயன்படுத்தப்படும் விவசாய இயந்திரங்கள், வாகனங்கள் மற்றும் கால்நடைகளை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லும் முன்பு நன்கு சுத்தம் செய்ய வேண்டும்.

புதிய பாத்தீனிய செடிகள் தோன்றியவுடன் உடனடியாக அகற்றுவதும், பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் அவசியம். அகற்றப்பட்ட செடிகளை விதைகள் அழியும் வகையில் உயர் வெப்ப / மூடிய உரமாக்கல் (hot composting/closed-pit composting) முறையில் அழிக்க வேண்டும்.

பாத்தீனியம் களையாக அறிமுகம் பெறுவதற்கு முன்பு பல்வேறு வகையான மருத்துவ தேவைகளுக்காகவும் மற்றும் பீடைப் பூச்சிகளை விரட்டும் நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டது. மிகவும் பாரதூரமான கொடிய நச்சுக்களையான பாத்தீனியம் நன்மை தரும் இயல்புகளையும் தன்னகத்தே கொண்டிருந்ததாக அறியப்பட்டுள்ளது.

அந்நியக் களையாக வர்ணிக்கப்படும் பாத்தீனியம் விவசாயம், மனித ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் ஆக்கிரமிப்புக் களையாகும்.

இதன் பரவலைத் தடுக்க உடனடி நடவடிக்கைகளும், தொடர்ச்சியான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மிகவும் அவசியமாகின்றன. சரியான கட்டுப்படுத்தும் முறைகள் பின்பற்றப்பட்டால் மட்டுமே இதன் பரவலை தடுக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1080





ஆழ்வார்க்கடியான் சுட்டிக்காட்டிய திசையில் உண்மையாக படகு வந்து கொண்டிருந்தது. அப்படகு வெள்ளத்தின் வேகத்தை எதிர்த்து இவர்கள் இருந்த கோயில் மண்டபத்தை நோக்கி மெதுவாக வந்து கொண்டிருந்தது. வானதி ஏறியிருந்த கூரையோ வெள்ளத்தோடு போய்க் கொண்டிருந்தது.

படகு இங்கே வந்து இவர்களை ஏற்றிக் கொண்டு போவதற்கு வெகு நேரம் ஆகி விடும். அதற்குள் வானதி அதிக தூரம் போய் விடுவாள். கண்ணுக்கு தெரியாமல் மறைந்தாலும் மறைந்து விடுவாள்.

இதையெல்லாம் எண்ணி மண்டபத்தின் மேல் நின்றவர்கள் படகில் வந்த ஜோதிடர் சீடனைப் பார்த்து உரக்கக் கத்தினார்கள் சமிக்ஞைகளும் செய்து பார்த்தார்கள். தன்னைச் சீக்கிரம் வரச் சொல்லுகிறார்கள் என்று எண்ணிக் கொண்டு அவன் படகை விரைவாகச் செலுத்தி வர முயன்றான்.

பூங்குழலி அப்போது குந்தவையைப் பார்த்து, "தேவி! எனக்கு அனுமதி கொடுங்கள்! நான் நீந்திப்போய் படகை வழிமறித்து அழைத்துச் சென்று கொடும்பாளூர் இளவரசியை ஏற்றி வருகிறேன்!" என்றாள். குந்தவை சிறிது தயங்கினாள். பூங்குழலி கையைக் கொடுக்கப் போய்த்தான் வானதி வெள்ளத்தில் விழுந்தாள் என்பது அவளுக்கு நினைவு இருந்தது.

"தேவி என்னை நம்புங்கள், என்னுடைய அஜாக்கிரதையினால்தான் இளவரசி வெள்ளத்தில் விழுந்தார். ஆகையால் அவரை மீட்பது என்னுடைய கடமை!" என்று பூங்குழலி கூறினாள்.

"பெண்ணே! உன்னை நான் நம்புகிறேன். ஆனால் வானதியைத் தான் நம்பவில்லை!" என்றாள் குந்தவை.

"ஆகா! நான் இருக்கும் படகில் ஒருவேளை ஏற மறுத்து விடுவார் என்கிறீர்களா? அப்படியானால் அவரை ஏற்றிவிட்டு நான் இறங்கிக் கொள்வேன்!" என்று சொல்லிக் கொண்டே பூங்குழலி வெள்ளத்தில் பாய்ந்தாள். படகை நோக்கி விரைந்து சென்றாள்.

குந்தவை ஜோதிடரைப் பார்த்து, "ஐயா! ஜோதிடரே! உம்முடைய சாஸ்திரத்தில் ரொம்ப நம்பிக்கை வைத்திருந்தேன் இன்றைக்கு அந்த நம்பிக்கையை இழந்து விட்டேன்!" என்றாள்.

"ஆனால் எனக்கு இன்றைக்குத்தான் பூரண நம்பிக்கை ஏற்பட்டது. தேவி! கொடும்பாளூர் இளவரசியின் ஜாதகப் பிரகாரம் அவருக்கு இன்று பெரிய கண்டம் வர வேண்டும். பழுவேட்டரையர் மூலம் அது வருமோ என்று நினைத்தேன். அப்படி வராமற் போகவே ஆச்சரியமடைந்தேன். வேறு விதமாகக் கண்டம் வந்தது. இளவரசி இந்தக் கண்டத்துக்குத் தப்பிப் பிழைப்பார்! ஆகா! அவருடைய அபூர்வமான கைரேகைகள்! அவர் விஷயமாக நான் சொல்லியிருப்பதெல்லாம் நிறைவேறும், அதைப் பற்றி சந்தேகமில்லை!" என்றார்.

"அழகாய்த்தானிருக்கிறது, அது எப்படி நிறைவேறும்? வானதி இந்தக் கண்டத்துக்குத் தப்பிப் பிழைத்தாலும் உம் ஜோசியம் நிறைவேறப் போவதில்லை. சற்றுமுன் உம்முடைய வீட்டில் அந்தப் பெண் செய்த சபதத்தை நீர் கேட்கவில்லையா?" என்றாள் குந்தவை. "யார் என்ன சபதம் செய்தாலும், என் ஜோசியம் நிறைவேறியே தீரும். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பால் பிடிக்காத பூனை



விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயருக்கு விலங்குகளை வளர்ப்பது பிடித்தமானது. பூனைகள் , நாய்கள் ஆகியவற்றை மிகவும் பிரியத்துடன் வளர்த்து வந்தார் அவர்.

அழகிய பாரசீகப் பூனைகளை விலை கொடுத்து வாங்கினார். அவருடைய அரசவையில் உள்ள அமைச்சர்கள் , புலவர்கள் , முக்கிய புள்ளிகள் ஒவ்வொருவருக்கும் ஒரு பூனையைக் கொடுத்தார். பூனையை வளர்க்க பாலுக்காக ஒவ்வொருவருக்கும் ஒரு பசுவையும் அளித்தார்.

கிருஷ்ண தேவராயருக்குப் பிடித்தமான தெனாலி ராமனுக்கும் ஒரு பாரசீகப் பூனையும் பசுவும் வழங்கப்பட்டது. யாருடைய பூனை நன்றாக கொழு கொழு என்று இருக்கிறதோ அவருக்கு நல்ல வெகுமதி வழங்கப்படும் என்று அரசர் அறிவித்தார்.

அனைவரும் பூனையுடனும் பசுவுடனும் மகிழ்ச்சியோடு தங்கள் வீட்டுக்குச் சென்றனர்.

பசுவுடன் தெனாலி ராமன் வீட்டுக்கு வருவதைப் பார்த்த தெனாலி ராமனின் மனைவி மகிழ்ச்சி அடைந்தாள். இனி மேல் வீட்டில் பாலுக்கும் தயிருக்கும் நெய்யுக்கும் குறைவு இருக்காது என்று நினைத்தாள். ஆனால் , தெனாலி ராமனின் கையில் இருந்த பூனையைப் பார்த்து முகம் சுளித்தாள். அந்தக் காலத்தில் பூனையை வளர்ப்பது பாவம் என்ற நம்பிக்கை நிலவியது.

தெனாலி ராமனின் மனைவி : இது ஏன் ? இதனால துரதிர்ஷ்டம் தான் வந்து சேரும்

தெனாலி ராமன் : சொல்ல முடியாது . இதுவே பெரிய அதிர்ஷ்டத்தை கொடுத்தாலும் கொடுக்கும்

தெனாலி ராமனின் மனைவி: என்ன சொல்றீங்க நீங்க ?

தெனாலி ராமன் : உனக்கு சொன்னால் புரியாது . நீ சுடச்சுட பால் கொண்டு வா

தெனாலி ராமனின் மனைவி ஒரு பாத்திரத்தில் கொதிக்கும் பாலை ஊற்றி அருகே வைத்தாள். தெனாலி ராமன் , பூனையின் வாயை கொதிக்கும் பாலில் வைத்து அமுக்கினான். சூடு தாங்காமல் அந்தப் பூனை ஓடியது. அடுத்தடுத்த முறைகளில் பால் வைத்த போது மியாவ் என்று கத்திக் கொண்டே ஓடி விட்டது.

அங்கு இங்கு என்று அலைந்து தேடி கிடைத்ததை சாப்பிட்டு உடலை வளர்த்து வந்தது அந்தப் பூனை . ஆனால் , தெனாலி ராமனின் வீட்டையே சுற்றி சுற்றி வந்தது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாம் எவ்வளவு கொடுக்கிறோம் என்பது முக்கியமல்ல. அதை நாம் எவ்வளவு அன்பாகக் கொடுக்கிறோம் என்பதுதான் முக்கியம்.

*– அன்னை தெரேசா*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அடுத்தகட்ட நகர்வாக இந்தியப் பிரதமரைச் சந்தியுங்கள்

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த காலங்களில் இந்தியாவுடன் காழ்ப்புணர்வு கொண்டிருந்தமை மிகத் தவறானது என்ற உண்மையை அவர்கள் தற்போது உணர்ந்திருப்பார்கள் என நம்பலாம்.

எனினும் அந்தக் காழ்ப்புணர்வு நிலைமை சமகாலத்தில் அவர்களிடம் இல்லை என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்ராலினுடன் நடந்த சந்திப்பு இப்போது தமிழக முதல்வர் ஜோசப் விஜய் உடனான சந்திப்பு வரை நீண்டுள்ளது.

இஃது ஓர் ஆரோக்கியமான செயற்பாடு என நேற்றையதினம் (05.07.2026) இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

இங்குதான் ஒரு விடயத்தைக் கூறியாக வேண்டும். அதாவது, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையினர் தமிழக முதல்வர் விஜயை சந்தித்தமை ஓர் பூர்வாங்க நடவடிக்கையாகும்.

அதாவது, ஒரு புதிய வீட்டை நிர்மாணிப்பதற்கு முன்னதாகப் பூமி பூசை நடத்துவது போல, ஒரு மகோற்சவத்திற்கு முன்னதாக ஆலயத்தில் வாஸ்து சாந்தி செய்வது போல தமிழக முதலமைச்சர் மற்றும் தமிழக அரசியல் தலைவர்களுடன் தமிழ்த் தேசியப் பேரவையினர் நடத்திய சந்திப்பு அமைகிறது.

இதை இன்னும் ஒருபடி மேற்சென்று கூறுவதாயின், ஈழத்தமிழர்களாகிய எங்களின் உரிமை சார் விடயத்தில் இந்திய மத்திய அரசின் தலையீட்டை நாம் ஏற்படுத்த வேண்டுமாயின், அதன் முதற்கட்டமாக தமிழக முதலமைச்சரை – தமிழக அரசியல் தலைவர்களைச் சந்தித்தேயாக வேண்டும்.

எனினும் தமிழகத்துடனான சந்திப்பு மட்டுமே எங்களின் இலக்கை அடைவதற்குப் போதுமானதல்ல.

இங்கு தான் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களைத் தமிழ்த் தேசியப் பேரவையினர் சந்திக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

ஆம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து; எங்கள் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை.

தமது உரிமைக்காக ஈழத்தமிழ் மக்கள் இழந்த உயிர்கள் – இழந்த சொத்துக்கள் ஏராளம். ஆயினும் சிங்கள ஆட்சியாளர்கள் ஈழத் தமிழ் மக்களுக்கு உரிமையை வழங்குவதில் பின்னடிக்கின்றனர்.

"இந்தியாவை நம்புங்கள்" என்று நீங்கள் கூறிய அந்த உத்தரவாதம் மீதான நம்பிக்கை இன்னமும் எங்களிடம் உச்சமாகவே உள்ளது.

எனவே உங்களால் மட்டுமே எங்கள் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுத் தரமுடியும் என அவரிடம் பக்குவமாக எடுத்துக் கூற வேண்டும்.

இங்கு பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கு முன்னதாக, இந்திய உபஜனாதிபதி இராதாகிருஸ்ணன் மற்றும் இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரை முதலில் சந்தித்து பிரதமர் மோடியுடனான சந்திப்புக்கும் அவருடனான அணுகுமுறைக்குமான வியூகங்களை அமைத்துக் கொள்வது கட்டாயமானது.

இந்த இராஜதந்திர நுட்பத்தை தமிழ்த் தேசியப் பேரவை பின்பற்றுமாக இருந்தால், எங்கள் விடயத்தில் இந்தியாவின் நடவடிக்கைகள் நிச்சயம் எங்களுக்குச் சாதகமாக அமையும் என்பது நிறுதிட்டமான உண்மை.

## வடக்கு கடலில் 65 கி.மீற்றர் வேகத்தில் காற்று வீசும்

### வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டைச் சூழவுள்ள கடற்பிராந்தியங்களின் பல பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் செம்மஞ்சள் நிற விசேட எச்சரிக்கையை விடுத்துள்ளது.

நேற்று(5) முற்பகல் 11.00 மணி முதல் இன்று (6) முற்பகல் 11.00 மணி வரை இந்த விசேட எச்சரிக்கை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, காங்கேசன்துறை முதல் மன்னார் ஊடாக புத்தளம் வரையான கடற்பிராந்தியங்களிலும் மாத்தறை முதல் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களிலும் மணித்தியாலத்துக்கு 55 முதல் 65 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணம் உள்ளடங்கலாக மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகள், வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் இரத்தினபுரி, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மணித்தியாலத்துக்கு 40 முதல் 50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## சட்டத்தரணியும் மனைவியும் சுட்டுப் படுகொலை வழக்கு

### முக்கிய நபர் கைது

(கொழும்பு)

அக்குரேகொடப் பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் சட்டத்தரணி புத்திக மல்லவாரச்சி மற்றும் அவரது மனைவி ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில், துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களுக்குப் போக்குவரத்து வசதி செய்து கொடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட முக்கிய சந்தேகநபர் மாலைதீவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் மாலைதீவில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு, நேற்று முன்தினம் (4) நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளுக்காக மேல் மாகாண தெற்கு குற்றப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ந-7)

## மோ.சைக்கிள் விபத்து பாதசாரி உயிரிழப்பு

கெக்கிராவப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கெக்கிராவ பொலிஸ் பிரிவின் கெக்கிராவ யக்கல்ல வீதியில், நேற்று முன்தினம் சனிக்கிழமை(4) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கெக்கிராவப் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 47 வயதுடைய நபர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கெக்கிராவ-யக்கல்ல வீதியில் யக்கல்ல நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஒரு மோட்டார் சைக்கிள், வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த பாதசாரி மீது மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநரும் பாதசாரியும் தம்புள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அங்கு பாதசாரி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெக்கிராவ பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

### யட்டியந்தோட்டை பொலிஸிடமிருந்து

## மாயமான துப்பாக்கி பாலத்தருகில் மீட்பு

(யட்டியந்தோட்டை)

யட்டியந்தோட்டை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரியிடம் இருந்து காணாமல் போன உத்தியோகபூர்வ துப்பாக்கி, யட்டியந்தோட்டை பாலத்திற்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸார் மற்றும் கடற்படை இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 27ஆம் திகதி துப்பாக்கி காணாமல் போனமை தொடர்பாக போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டு ருவான்வெல்ல நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## எல்ல வனப் பகுதியில் பயங்கரத் தீ விபத்து

எல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கும்பல்வெல பகுதியில் அமைந்துள்ள மஹாமேவ்னாவா பௌத்த விகாரைக்கு அருகிலுள்ள பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் நேற்று முன்தினம் (4) சனிக்கிழமை இரவு திடீரெனப் பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த தீப் பரவலை தீயணைப்புப் படையினர், பொலிஸார், முப்படையினர், வன பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் ஆகியோர் இணைந்து முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

இந்தத் தீ விபத்தினால் யாருக்கும் எவ்வித உயிராபத்தோ அல்லது காயங்களோ ஏற்படவில்லை என்பதுடன்,

விகாரைக்கோ அல்லது அருகிலுள்ள குடியிருப்புப் பகுதிகளுக்கோ எந்தவிதமான சொத்துச் சேதங்களும் ஏற்படாமல் முன்கூட்டியே தடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாக்கப்பட்ட இந்த வனப்பகுதியில் தீப்பிடித்ததற்கான உண்மையான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. எல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ந-7)

## போதைவஸ்து விநியோகம் எப்பாவலவில் பெண் கைது

(எப்பாவல)

எப்பாவல மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல பிரதேசங்களில் நீண்டகாலமாக சட்டவிரோத மதுபானம் மற்றும் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் ஹெரோயினுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எப்பாவல பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், குறித்த பெண்ணின் இல்லத்தை அதிரடியாகச் சோதனையிட்ட போதே அவரிடமிருந்து 2.450 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இப்பெண்ணுக்கு, இதற்கு முன்னரும் சட்டவிரோத மதுபானக் கடத்தல்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரம் தொடர்பாக 10 இற்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகள் உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசத்தின் முக்கிய போதைப்பொருள் விநியோகஸ்தராக இவர் செயற்பட்டு வந்துள்ளார் என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பெண் நேற்று முன்தினம் சனிக்கிழமை (4) தம்புத்தேகம நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேக நபரை வரும் ஜூலை மாதம் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நார்ச்சத்துள்ள மூலிகை உணவுகளும், மருத்துவ முக்கியத்துவமும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


நாம் உட்கொள்ளும் இயற்கை உணவில் நார்ச்சத்து நிறைந்து இருக்கும். இந் நார்ச்சத்துள்ள உணவுகளை நாம் எடுக்காவிட்டால், நம்முடைய செரிமான மண்டலத்தின் செயற்பாடுகள் சீராக அமையமாட்டாது. அந்த அளவிற்கு அத்தியாவசியமான பொருள். இது நாம்உட்கொள்ளும்உணவு செரிக்கப்பட்டு சிறுகுடல், பெருங்குடல், மலக்குடல் வழியே பயணித்து வெளியேற வேண்டும்.

இப்படி ஒவ்வொரு பகுதியாகச் செல்லும் போது தான் அதில் உள்ள ஊட்டச்சத்துக்களை உடல் கிரகித்துக் கொள்ளும். நார்ச்சத்து இல்லாத உணவை உட்கொள்ளும் போது அது உணவின் செரிமான மண்டலப் பயணத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

விலங்குகளில் சைவம், அசைவ உணவு சாப்பிடுபவை எனப் பிரித்து, விலங்குகளில் அதன் வாழ்க்கை முறையை கவனித்தால், உதாரணமாக யானை, மான், மாடு போன்ற சைவ விலங்குகள் உடல் கழிவை பெரிய அளவில் அதே நேரத்தில் எவ்வித சிரமமும் இன்றி வெளியேற்றும்.இதுவே அசைவ உணவை உண்ணும் சிங்கம், புலி போன்ற விலங்குகளின் கழிவுகள் கெட்டியாகி, வெளியேற்ற சிரமப்படுவதையும் காணலாம்.

இதே உதாரணம் மனிதருக்கும் பொருந்தும். சைவ உணவுகளில் நார்ச்சத்து நிறைந்திருப்பதும், அசைவ உணவுகளில் நார்ச்சத்து குறைவாக இருப்பதுமே அதற்குக் காரணமாகும்.

நார்ச்சத்தானது ஒரு வகையான காபோவைதரேற்று சத்து. ஆனால் இதை நம்முடைய உடலால் செரிமானம் செய்ய முடியாது. மற்ற காபோவைதரேற்று எல்லாம் சர்க்கரையாக மாற்றப்பட்டு உடல் பயன்படுத்தும் ஆனால் இந்த நார்ச்சத்து மட்டும் குளுக்கோசாக மாற்றப்படுவது இல்லை. அதனால் செரிமானம் ஆகாமல், கழிவாக வெளியேறுகிறது.



குடலில் உணவு பயணிக்கும் போது எங்கேயும் சிக்கிவிடாமல் வெளியேற சங்கிலித் தொடர் போல செயற்பட்டு உதவுகிறது.

தவிர, நார்ச்சத்துள்ள உணவை உட்கொள்ளும் போது, சிறிது சாப்பிட்டாலும் வயிறு நிறைந்த உணர்வைத் தரும்.சர்க்கரை அளவை கொஞ்சம், கொஞ்சமாக இரத்தத்தில் கலக்கச் செய்யும். இதன் காரணமாக இரத்தத்தில் சர்க்கரை அளவு கட்டுக்குள் இருக்க, பெரிதும் உதவுகிறது.

நார்ச்சத்தை நீரில் கரையக் கூடியது, கரையாதது என்று இரண்டாகப் பிரிக்கலாம்.

நார்ச்சத்து அதிலும் குறிப்பாக கரையாத நார்ச்சத்து செரிமானத்தை மேம்படுத்தி மலச்சிக்கலைப் போக்குகிறது. கழிவின் எடையை அதிகரிக்கச் செய்து, செரிமான மண்டலத்தில் பயணிக்கும் கால அளவைக் (Colnic transit time) குறைத்து விடுகிறது. நார்ச்த்து அதிகமாக உணவில் சேர்த்துக் கொண்டால்தான் குடலின் இயக்கம், செரிக்கும் தன்மை எளிதாக இருக்கும். கழிவுகள் முழுமையாக வெளியேறும். நார்ச்சத்து குறைந்த உணவு உட்கொள்ளும் போது உணவு பயணிக்கும் நேரம் அதிகமாகும் மலக்குடலிலே அதிக நேரம் கழிவு தங்கும். இந்த நிலையில் கழிவில் இருந்து நைட்ரஜன் உருவாகி மலக் குடல் செல்களைப் பாதிக்கும். இவர்களுக்கு புற்றுநோய்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

இதுவே நார்ச்சத்து உள்ள உணவாக இருந்தால், பெருங்குடலில் உள்ள நன்மை செய்யும் பக்றீரியா, நார்ச்சத்து புளிக்கச் செய்கிறது. இப்படி புளிக்கச் செய்வதனால் கிடைக்கும் பொருளே பெருங்குடலின் செல்களுக்கு தேவையான ஆற்றலாக மாறிவிடுகிறது.

இதனால் பெருங்குடல் மற்றும் மலக்குடல் தொடர்பான புற்றுநோய்கள் வரும் வாய்ப்பு குறைந்து விடுகிறது அதிக நார்ச்சத்துள்ள உணவு உண்பவர்களுக்கு சர்க்கரை நோய் மற்றும் மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைகிறது.

இரத்தத்தில் சர்க்கரை மற்றும் கொழுப்பு அளவையும் கட்டுக்குள் வைக்க இது உதவும். பச்சை நிறக் காய்கறிகள், கீரை வகைகள், இலைவகைகள் , முள்ளங்கி, முட்டை கோஸ், வெங்காயத் தாள் போன்றவற்றில் நார்ச்சத்து அதிகமாக உள்ளது.

எல்லாப் பழங்களிலும் நார்ச்சத்துக்கள் உள்ளன. பழங்களை அப்படியே சாப்பிட்டால் நார்ச்சத்து உடலுக்குள் சேரும். ஜூஸாக தயாரிக்கும் போது நார்ச்சத்து சிதைந்துவிடும் வெறும் விற்றமின், தாது உப்பு உள்ள ஊட்டச் சத்துக்கள் மட்டுமே கிடைக்கும். வாழைப் பழத் தோலில் அதிக அளவு நார்ச்சத்து உள்ளது.

தோலை நாம் தவிர்த்தாலும், மெல்லிய இழை போன்ற தோலில் ஒட்டியிருக்கும் படிமத்தை எடுத்துச் சாப்பிட்டு வர, நார்ச்சத்து அதிக அளவில் கிடைக்கும். பருப்பு தோலுடன் பயறு, நட்ஸ்,(nuts) ஆகிய வற்றிலும் நார்ச்சத்து இருக்கிறது. கைக்குத்தல் அரிசி, சிறுதானியங்களான குரக்கன், சாமை, வரகு, கம்பு, குதிரைவாலி அரிசி போன்றவற்றில் அதிகளவு நார்ச்சத்துக்கள் உண்டு.

அரிசியை தீட்டும் போது நார்ச்சத்தும் சேர்ந்து வெளியேறுகிறது. ஒரு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் முதல் முதியோர்கள் வரை அனைவருக்கும் நார்ச்சத்து தேவை. ஒரு நாளைக்கு வயது வந்தவர்கள் சராசரியாக 25-35 கிராம் நார்ச்சத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

மற்றும் பேரிக்காயில் கரையக் கூடிய நார் அதிகமாக இருக்கிறது. அவகாடோ அல்லது சீமைக்கொய்யாப் பழத்தில் ஆரோக்கியமான கொழுப்புகள் (healthy fats) நிறைந்து காணப்படும். அப்பிள் நார் நிறைந்த பழம். இதில் உள்ள பெக்டின் கொலஸ்ரோலை குறைக்க உதவும். பச்சைப் பட்டாணியும் அதிக நார் மற்றும் தாவர புரதத்தையும் அதிகளவில் கொண்டது.

உலர்ந்த அத்திப் பழத்திலும் அதிக நார்ச்சத்து உள்ளது.நார்ச்சத்து நிறைந்த உணவுகள் ஆரோக்கியமான உடல் எடையை பராமரிக்க உதவுகிறது.நார்ச்சத்துக்கள் அடங்கிய உணவுகளில் கலோரிகள் குறைவாக இருப்பதனால் உடல் எடையை குறைக்கவும் உதவுகிறது.

கறுப்பு கவுணி அரிசியிலும் நார்ச்சத்து உள்ளது. பீன்ஸ் வகைகளிலும் நார்ச்சத்து உள்ளது. காய்கறிகள், கீரைகளில் கிடைக்கக்கூடிய நாச்சத்து கரையமுடியாத நார்ச்சத்து ஆகும்.

இச் சத்து சிறந்தது. கிட்டத்தட்ட தினமும் 400-500 கிராம் காய்கறிகள் சாப்பிட்டால் 30-35 கிராம் அளவு நார்ச்சத்து கிடைக்கும். மதியமும், இரவுமாக பிரித்துச் சாப்பிடலாம்.

# இராசிபலன்

06.07.2026
ஆனி 22, திங்கட்கிழமை
சஷ்டி முற்பகல் 10.23 மணிவரை

பூரட்டாதி பிற்பகல் 1.24 மணிவரை
சுப நேரம் 11.58-1.28 மணிவரை
இராகுகாலம் 7.28-8.58 மணிவரை

சந்திராஷ்டமம்- மகம், பூரம்.

வளவன்




மன அமைதி கூடும் நாள், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், தொழில் ரீதியான புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் குதூகலம் கூடும்.




பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், வாகன சுகமுண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, தொழில் வளர்ச்சி கூடும், போசன சுகமுண்டு.




கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் கூடும், பயணங்களால் பலனுண்டு.




மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.




சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.




தலைமைப் பொறுப்புகள் உங்களைத் தேடி வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், நினைத்த காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.




தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், மகிழ்ச்சி கூடும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.




நண்பர்களால் வளர்ச்சி கூடும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் அகலும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.




புதியவர்களின் நட்பு கிடைக்கும், குடும்ப இரகசியங்கள் மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்க முடியாது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வடக்கில்...

உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள தனியார் காணிகளை விடுவிக்கக் கோரி காணி உரிமையாளர்கள் மூன்றாவது வாரமாகவும் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பலாலி சந்தியில் காலை 8.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் நிலங்களை மீள வழங்குமாறு வலியுறுத்தினர்.

அதேவேளை போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வெயிலில் இருந்து தம்மை பாதுகாக்க அப்பகுதியில் தற்காலிகக் கொட்டகை அமைக்க முற்பட்ட போது பலாலிப் பொலிஸார் அதற்கு தடைவிதித்ததுடன் வடக்கில் கொட்டகை அமைத்துப் போராடினால் தெற்கிலும் கொட்டகை அமைத்துப் போராடுவார்கள் என்பதால் கொட்டகை அமைக்க அனுமதிக்க முடியாது எனப் பொலிஸார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## காணி, பொலிஸ்...

ளுக்கு அப்பாற்பட்ட வகையில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரச் சட்டங்களை உருவாக்கத் தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டினார்.

கொழும்பில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (04) நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் அடுத்த கட்டச் சதி என்னவென்றால், அடுத்த வருடத்தின் முதல் 06 மாதங்களுக்குள் வடக்கு மற்றும் கிழக்கில் மாத்திரம் மாகாண சபைத் தேர்தலை நடத்தி, அங்கு தெரிவாகின்ற முதலமைச்சருக்குத் தேவையான ஆளுநரை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நியமித்துக் கொடுப்பார். அதன் பிறகு அவர்களுக்குத் தேவையான காணி மற்றும் பொலிஸ் அதிகார சட்டங்களை மாகாண சபை ஊடாகக் கொண்டு வருவார்கள்.

தற்போதைய அரசியலமைப்பின்படி பாராளுமன்றச் சட்டத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்ல முடிந்தாலும் மாகாண சபைச் சட்டத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்ல முடியாது என்ற சட்டச் சிக்கல் காணப்படுகின்றது.

இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவே அரசாங்கம் முற்படுகின்றது.

ஆளுநராகத் தமக்கு வேண்டிய நம்பிக்கையானவர்களை நியமித்து, அந்த இரு மாகாணங்களிலும் சட்டம் தனித்து காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்தை உருவாக்குவதே இவர்களின் பிரதான திட்டமாகும்.

எதிர்பாராத விதமாகத் தமக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளவும் சர்வதேச சக்திகளின் தேவைகளை நிறைவேற்றவும் ஜனநாயகத்தையும் சமூக ஒழுக்கங்களையும் குழிதோண்டிப் புதைத்து, எந்தவொரு கீழ்த்தரமான வேலைக்கும் செல்லத் தயாராக இருக்கும் அரசாங்கத்தின் இந்த ஆபத்தான அரசியல் ஆட்டத்தை அப்படியே வேடிக்கை பார்க்க முடியாது.

அதனை முறியடிக்க இந்நாட்டின் அனைத்து ஜனநாயக சக்திகளும் ஓரணியில் திரளத் தயாராக இருக்கின்றன என்றார். (ந-7)

## டெங்குக்கு...

இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து க்ளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தின் மேலதிக செயலாளர் தெரிவித்ததாவது, மக்கள் தங்கள் பகுதிகளில் பயன்படுத்தப்படாத நீர் தேங்கும் பாத்திரங்கள், கழிவுகள், பழைய டயர்கள் போன்றவற்றில் டெங்கு நுளம்புகள் பெருகும் வாய்ப்பு உள்ள இடங்களை அடையாளம் கண்டால், உடனடியாக டெங்கு நிவாரண மையத்திற்கு தகவல் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக டெங்கு நிவாரண மையத்தின் அவசர தொலைபேசி இலக்கம் 011 796 6366 பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இலக்கத்தின் ஊடாக பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் காணப்படும் ஆபத்தான இடங்களை அறிவிக்க முடியும்.

பெறப்படும் தகவல்களின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு சுகாதார அதிகாரிகள் மற்றும் டெங்கு கட்டுப்பாட்டு குழுக்கள் அனுப்பப்பட்டு, உடனடி சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.(ந-7)

## விபத்துத்...

வருடாந்தம் ஆயிரக்கணக்கான உயிர்கள் பறிபோவதையும் இலட்சக்கணக்கான மக்கள் காயங்கள் மற்றும் ஊனமுறுவதையும் கருத்திற்கொண்டு, பொதுமக்களிடையே விபத்துத் தடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இது பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய இன்று முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இந்த விபத்துத் தடுப்பு வாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டின் அரசாங்க வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களில் கணிசமான சதவீதமானோர் அனர்த்தங்கள் காரணமாகவே சிகிச்சை பெற்று வருவதுடன் அவற்றில் தவறி விழுதல், வீதி விபத்துக்கள், பணியிட விபத்துக்கள், நீரில் மூழ்குதல் முதன்மை பெற்றுள்ளன. சுகாதார சேவைக்கு மட்டுமன்றி, நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கும் விபத்துக்களினால் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதே இந்த வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்ப விழா இன்று சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் அமைச்சின் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவு, தேசிய விபத்துத் தடுப்புக்கான ஆலோசனைக் குழுவின் வழிகாட்டலின் கீழ் ஒழுங்கமைக்கும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ், ஒவ்வொருநாளும் ஒரு விசேட கருப்பொருளின் அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ந-7)

## நேரத்தை மாற்றிய...

மைக்கால ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளதாக, தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

இதற்கு முன்னர் டெங்கு நுளம்புகள் சூரிய உதயத்தின் போதும், சூரிய அஸ்தமனத்தின் போதுமே அதிகச் செயற்பாட்டுடன் இருந்தன. இருப்பினும் புதிய ஆய்வுகளின்படி தற்போது காலை 6.00 மணி முதல் பகல் 11.00 மணி வரையிலான காலப்பகுதியிலேயே இந்த நுளம்புகள் அதிக செயற்பாட்டுடன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

காலை நேரமானது பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் வெளிப்புறச் சூழலில் அதிகளவில் நடமாடும் நேரமாக இருப்பதால் நுளம்புகள் குத்துவதற்கு வாய்ப்பும் ஆபத்தும் கணிசமாக அதிகரித்துள்ளது. அத்துடன் பாடசாலைச் சூழல்களில் நுளம்புகள் பெருமளவில் காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள் இந்த ஆபத்திற்கு உள்ளாவதாகவும் தெரிவித்தார். (ந-7)


மஹஜன சம்பத — NLB
திகதி 2026.07.05 சீட்டிழுப்பு இலக்கம் 6239
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்: C 5 6 1 9 3 9
அத சம்பத — C 1 9 3 9 — சீட்டிழுப்பு இலக்கம் 0814

சுப தவசக — திகதி 2026.07.05 — சீட்டிழுப்பு இலக்கம் 8355
மீனம் 10 18 64 — 5055

தன நிதானய — திகதி - 2026.07.05 — சீட்டிழுப்பு இலக்கம் - 2269
L 01 03 25 79 L — 0049

மெகா பவர் — திகதி 05/07/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2587
U 26 08 55 72 74

ஜய — திகதி 2026.07.05 — சீட்டிழுப்பு இலக்கம் 507
B 3 2 0 4 — 4769

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4481 — சீட்டிழுப்பு திகதி 05.07.2026
T 35 37 71 77

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.07.05 — சீட்டிழுப்பு இலக்கம் 1548
துலாம் 16 17 20 35 துலாம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 05.07.2026 — வெற்றி வாரம் 0947
A 6 3 2 9 6 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,208,926.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3213 — 25000 பணப் பரிசு 55173 — சீட்டிழுப்பு திகதி 2026.07.05 — தினம் ஞாயிற்றுக்கிழமை
01 13 24 67 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,609,136.80

சனிதா — திகதி 05.07.2026 — வெற்றி வாரம் 5374
20 33 53 66 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,624,137.60
ரூ. 50,000/- பணப்பரிசு 62396

சசிரி — வெற்றி வாரம் 1043 — சீட்டிழுப்பு திகதி 05.07.2026 — ஞாயிற்றுக்கிழமை
14 38 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,428,400.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4925 — சீட்டிழுப்பு திகதி 05.07.2026 — தினம் ஞாயிற்றுக்கிழமை
04 22 52 62 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,630,166.40

லக்ன வாசனா — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 38 05 09 55 60 — 2389 — 05.07.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.309,028,292.00

அட கோடிபதி — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 3039 — சீட்டிழுப்பு திகதி 2026.07.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,111,170.40
14 18 26 52 W


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இராணுவ...

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரை துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கேப்பாபுலவுப் பகுதியில், தமது பூர்வீகக் காணிகளை மீளப் பெற்றுத்தர வேண்டும் என வலியுறுத்தி ம்க்கள் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இதுவரை உரிய தீர்வு எட்டப்படாத காரணத்தால், நேற்று (05) காலை கேப்பாப்புலவு இராணுவ பிரதான வாயிலுக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது காணிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளதுடன் மக்களின் பயன்பாட்டிற்காக இருந்த பாடசாலை, ஆலயம், தேவாலயம் மற்றும் பொது மண்டபம் ஆகிய வற்றையும் இராணுவம் தொடர்ந்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகத் தெரிவித்தனர்.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை உடனடியாக விடுவித்து, இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்களது சொந்த கிராமங்களில் மீள்குடியேற வழிவகுக்குமாறு அரசாங்கத்திடமும் ஆளுநரிடமும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். பல ஆண்டுகளாக பல்வேறு அரசுகளிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், தங்களது காணிகள் இன்னும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை என அவர்கள் கவலை வெளியிட்டனர். தங்களது காணிகளும் பொதுச் சொத்துகளும் முழுமையாக மீள வழங்கப்படும் வரை போராட்டம் தொடரும் என அவர்கள் தெரிவித்தனர்.

குறித்த போராட்டத்தின் போது எமது நிலம் எமது உரிமை, நிலப் பறிப்பு என்பது அப்பட்டமான மனித உரிமை மீறல், இராணுவ நிலைகளினை அரச காணிகளினுள் உடனடியாக நகர்த்துங்கள், இராணுவமே வெளியேறு, எமது நிலம் எமக்கு வேண்டும், எமது வாழ்வாதாரம் எமக்கு வேண்டும், மூதாதையர் பூமி எமக்கு வேண்டும் போன்ற பல்வேறு வாசகங்களடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு கோசங்களை எழுப்பி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், சட்டத்தரணி வி.மணிவண்ணன், மக்கள் போராட்ட முன்னணி உறுப்பினர் (அரகல) ராஜ்குமார் ரஜீவ்காந், அரசியல் செயற்பாட்டாளர் எஸ்.தவபாலன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் ஞா.யூட்சன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் க.விஜிந்தன், முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சம்மேளன பிரதிநிதி நே.சங்கீதன், முன்னாள் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், கேப்பாப்புலவு மக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

கேப்பாப்புலவில் 55 குடும்பங்களுக்கு சொந்தமான 59.5 ஏக்கர் பூர்வீக வாழ்விடக் காணிகள் நீண்டகாலமாக இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் இருக்கின்றது. குறித்த காணிகளை உடனடியாக உரிய மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியே பாதிக்கப்பட்ட மக்கள் இத் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ந-7,299)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5980)

**076 825 7716 (ஆகாஸ்)**



**வெறுப்பை நிராகரித்து மனிதநேயத்தை உயர்த்துவோம்**

ஒவ்வொரு தகவலும் பகிரப்பட வேண்டியது அல்ல.

தீர்மானத்தை மீறிய உணர்ச்சிகளால் வெறுப்பான தகவல்கள் வேகமாக பரவுகின்றன.

மக்களை உயர்த்தும், சமூகங்களை வலுப்படுத்தும் மற்றும் மரியாதையை வளர்க்கும் தகவல்களை தெரிவு செய்து பகிருங்கள்.

நாம் விழிப்புணர்வுடன் வெறுப்பை நிராகரிப்போம்.

இந்த செய்தி SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது. (7775)



**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**11.07.2026**

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AAI, AA2, AA3)
Qualification :- G.C.E O/L 6 Passes
(Medium - Tamil & English)

A/L மாணவர்களின் நலன் கருதி வார நாட்களிலும் aat வகுப்புக்கள் நடாத்த தீர்மானித்துள்ளோம்.

கணக்காளர் கற்கைநெறிகள்
Chartered Accounting Courses
"New Syllabus" - Business Level
Qualification :- G.C.E A/L 3 Passes
(Medium - Tamil & English)

Further Details :- Jaffna College
Undergraduate Dept.
464, Hospial Road, Jaffna.
(யாழ்.ஆஸ்பத்திரி வீதியில், கொமர்ஷல் வங்கி அருகில்)
021 222 3382 / 0774405917
(C-5977)



**சாரதி தேவை (AD)**

திருநெல்வேலி, புதுக்குடியிருப்பு போன்ற பிரதேசங்களில் வியாபார ஸ்தாபனத்துக்கு வாகன சாரதி தேவை. (7991)

**077 221 0294**



**மணப்பெண் தேவை**

01.கோப்பாய், இந்து, 1990, திருவோணம், Phd Civil Engineer National University of Singapore, Lecturer (UK) Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34855)

02.காரைநகர், இந்து, 1991, அனுஷம், Engineering Peradeniya University, Engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (55580)

03.உரும்பிராய், இந்து, 1992, உத்திரட்டாதி, BSc (Hons), Phd, Lecturer மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54236)

04.கோண்டாவில், இந்து, 1993, உத்தரம், BSc in Civil & Structural Engineering, Civil Engineer, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (58653)

05.மயிலிட்டி, இந்து, 1994, உத்தராடம், Bsc, MSc Peredeniya University, Project Management, Site Engineer, UK Citizien மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (58426)

06.நல்லூர், இந்து, 1995, ரேவதி, MSc Software Engineering (UK) Software Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54570)

07.அளவெட்டி, இந்து, 1996, சித்திரை, Bachelor of Information Technology & Master of Information Technology, Cyber Security Analyst and Engineer, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (58773)

08.வேலணை, இந்து, 1995, உத்திரட்டாதி, BSc in Land Surveying, Post Graduate Construction Project management (Canada) Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (58679)

09.அத்தியடி, இந்து, 1988, அஸ்வினி CIMA, Cpa Masters of Commerce Charles Sturt University Australia, Financ Manager, divorce, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண்' தேவை. (58669)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (C-5978)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 992 1494




**தவறிவிட்டது**

சபாரி மோட்டார் சைக்கிளுக்குரிய புத்தகம், இன்சூரன்ஸ், ரக்ஸ் அச்சுவேலி வளலாய் பகுதிக்கும் மயிலிட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொண்டு அனுப்பிவிடவும். (2486)

சபாரி மோட்டார் சைக்கிள்
W.G. 3246 கந்தசாமி கோகுலன்
அளவெட்டி மேற்கு, பத்து பனையடி. 077 6679 557


## மரண அறிவித்தல்

தோற்றம்
04 - 08 - 1953



மறைவு
04 - 07 - 2026

### ஆறுமுகம் ஏகானந்தசிவம்

**(ஓய்வுநிலை முகாமைத்துவ உத்தியோகத்தர் - யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் யாழ்.மாநகர சபை)**

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 340, கோவில் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஏகானந்தசிவம் (ஓய்வுநிலை முகாமைத்துவ உத்தியோகத்தர் - யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் யாழ். மாநகர சபை) அவர்கள் கடந்த 04.07.2026 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

340, கோவில் வீதி,
நல்லூர்.

0775573860 - அபீசன்
0779677158 - அனுஜன்

(C-5979)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media